بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

இதழ் 11

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

26 ஜமாதுஸ்ஸானி 1439 ஹிஜ்ரி கமரி 15 அமான் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

15 மார்ச் 2018

## அல்லாஹ்வின் கட்டளை

وَلِلّٰہِ الۡمَشۡرِقُ وَالۡمَغۡرِبُ ٭

فَاَیۡنَمَا تُوَلُّوۡا فَثَمَّ وَجۡہُ اللّٰہِ ؕ

اِنَّ اللّٰہَ وَاسِعٌ عَلِیۡمٌ

கிழக்கும் மேற்கும் அல்லாஹ்விற்கே உரியன. எனவே, நீங்கள் எத்திசையை நோக்கினாலும் அங்கே அல்லாஹ்வின் கவனமிருக்கும். நிச்சயமாக அல்லாஹ் வளமாக வழங்குபவனும் நிரந்தரமான அறிவை உடையவனுமாவான்.

(அதிகாரம் அல் பக்கரா : 116)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எனது அடையாளங்களுக்கு முஸ்லிம்கள் மட்டும் சாட்சியாக இருக்கவில்லை. மாறாக, உலகில் எந்த அளவு சமுதாயங்கள் உள்ளனவோ அவர்கள் அனைவரும் எனது அடையாளங்களுக்கு சாட்சிகளாக இருக்கின்றனர் என்பதற்காக வல்லமையுள்ள இறைவனுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். فَالۡحَمۡدُ لِلّٰہِ عَلٰی ذٰلِکَ**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**114 -வது அடையாளம்:** பிளேக் பரவுவது தொடர்பாக الامراض تشاع والنفوس تضاع அதாவது, நோய்கள் பரப்பப்படும். மேலும் உயிர்களுக்கு இழப்பு ஏற்படும் என்று எனக்கு இல்ஹாம் வந்தது. இப்போது எவர் விரும்புகின்றாரோ அவர் பார்த்துக் கொள்ளட்டும். இந்த இறை அறிவிப்பை பிளேக் நோய் பரவுவதற்கு முன்னதாகவே அல்ஹகம் பத்திரிகையிலும் அல் பத்ர் பத்திரிகையிலும் நான் வெளியிட்டிருந்தேன். இதற்குப் பிறகு பஞ்சாபில் எந்த அளவு பிளேக் வலுவாகப் பரவியது என்றால் ஆயிரக்கணக்கான வீடுகள் மரணங்களால் பாழடைந்து போயின.

**115 -வது அடையாளம்:** சிராஜே முனீர் என்ற நூலில் பிளேக் வருவது தொடர்பாக இந்த ஒரு முன்னறிவிப்பு இருக்கின்றது. یا مسیح الخلق عدوانا அதாவது, படைப்பினங்களுக்காக அனுப்பப்பட்டுள்ள மஸீஹே! நமது பிளேக் நோயைப் பற்றிய செய்தியைக் கேட்பீராக. இதற்குப் பிறகு கடுமையான பிளேக் பரவியது. ஆயிரக்கணக்கான இறையடியார்கள் பிளேக்கிற்கு பயந்து என் பக்கம் ஓடி வந்தனர். ஒரு வகையில் பார்த்தால் அவர்களது நாவுகளில் مسیح الخلق عدوانا (நமது பிளேக் பற்றிய செய்தியைக் கேட்பீராக) என்ற இதே சொற்றொடர்கள் இருந்தது. இந்த முன்னறிவிப்பு எவ்வாறு எனது நூலான சிராஜே முனீரில் எழுதப்பட்டிருக்கின்றதோ அவ்வாறே நூற்றுக்கணக்கான மனிதர்களுக்கு இவ்வாறு நிகழ்வதற்கு முன்னரே இது தொடர்பாக தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

**116 -வது அடையாளம்:** ஒருமுறை சுபுஹ் நேரத்தில் இறைவனின் வஹியினால் எனது நாவில் அப்துல்லாஹ் கான் டேரா இஸ்மாயீல் கான் என்ற வார்த்தைகள் வெளி வந்தன. மேலும் இந்த பெயரிலுள்ள ஒரு நபர் இன்று கொஞ்சம் தொகையை அனுப்புவார் என்று எனக்கு புரிய வந்தது. இறைவனின் வஹியின் தொடர் தொடர்ந்து இருந்து வருகின்றது என்பதை மறுக்கின்றவர்களாகவும் பலவற்றையும் வேதத்துடன் முடிவுக்குக் கொண்டு வந்து விட்ட சில இந்துக்களிடம் இறைவனின் இந்த அறிவிப்பைப் பற்றி கூறினேன். மேலும் இன்று ரூபாய் வரவில்லையென்றால் நான் உண்மையில் இல்லை என்றும் கூறினேன். இன்றைய நாட்களில் ஓரிடத்தில் நிலத்தை அளப்பவராக இருந்து வருகின்ற பிராமண சமுதாயத்தைச் சார்ந்த பிஷன்தாஸ் என்ற பெயரிலுள்ள ஓர் இந்து நான் இந்த விஷயத்தைச் சோதித்துப் பார்ப்பேன். நான் தபால் நிலையத்திற்குச் செல்வேன் என்று கூறினார். அந்த நாட்களில் காதியானில் தபால்கள் மதியத்திற்குப் பிறகு இரண்டு மணிக்கு வந்தன. அவர் அதே சமயத்தில் தபால் நிலையத்திற்குச் சென்றார். மேலும் மிகவும் வியப்படைந்தவாறு உண்மையில் டேரா இஸ்மாயீல் கானிலிருந்து அங்கு எக்ஸ்ட்ரா அஸிஸ்டென்டாக இருந்து வருகின்ற அப்துல்லாஹ் கான் என்ற பெயரிலுள்ள ஒரு நபர் கொஞ்சம் தொகையை அனுப்பியுள்ளார் என்ற பதிலைக் கொண்டு வந்தார். மேலும் அந்த இந்து மிகவும் ஆச்சரியத்துடனும் வியப்புடனும் மீண்டும் மீண்டும் என்னிடம் இந்த விஷயம் பற்றி உங்களுக்கு யார் கூறினார்? என்று கேட்டார். அவரது முகத்தில் வியப்பு மற்றும் வாயடைத்துப் போவதற்கான அடையாளங்கள் வெளிப்பட்டன. அப்போது நான் அவரிடம் மறைவான இரகசியங்களை அறிந்தவனே இதனை கூறினான். அந்த இறைவனைத்தான் நாங்கள் வணங்குகின்றோம். இந்துக்கள் இந்த உயிருள்ள இறைவனை குறித்து முற்றிலும் அறியாமல் இருக்கின்றனர். அவன் தனது வல்லமையால் இஸ்லாத்தின் உண்மைக்கான முன்மாதிரியை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றான் என்று நான் அவரிடம் கூறினேன். ஏனென்றால் பொதுவாக இந்துக்களின் பழக்கம் என்னவென்றால் முதலாவதாக, இறைவனின் வியக்கத்தக்க அடையாளங்களை அவர்கள் மறுக்கின்றனர். மறைவான விஷயங்களை தனது கைகளினால் வெளிப்படுத்துகின்ற அத்தகைய ஒரு நபர் அவர்களுக்கு கிடைக்கின்றபோது அவர்கள் ஆச்சர்யம் மற்றும் வியப்பின் நதியில் மூழ்கி விடுகின்றனர். இவ்வாறான நிலைமை லாலா ஷரம்பத்திற்கும் ஏற்பட்டிருந்தது. நான் ஏற்கெனவே எழுதியிருப்பது போன்றே அவரது சகோதரரான பிஷம்பர்தாஸ் மற்றும் ஹுஸ்ஹால் என்ற பெயரையுடைய இன்னொரு நபரும் ஏதாவதொரு குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர். மேலும் ஷரம்பத் எந்தவொரு கொள்கை, பற்றின் காரணமாக அல்லாமல் என்னை சோதித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கின் முடிவு என்னவாக இருக்கும்? என்று என்னிடம் கேட்டிருந்தார். மேலும் துஆ செய்யுமாறும் வேண்டியிருந்தார். அப்போது நான் அவருக்காக துஆ செய்து கொண்டிருந்தேன். இறுதியில் மறைவானவற்றை அறிந்திருக்கின்ற அந்த இறைவன் இரவு நேரத்தில் வழக்கின் முடிவு எவ்வாறு இருக்கும் என்றால், பிஷம்பர்தாஸ் கைதில் இருக்கின்ற நாட்களில் பாதி குறைக்கப்பட்டு விடும் என்ற மறைவான விஷயத்தைத எனக்கு தெரிவித்தான். நான் கஷ்ஃபின் நிலையில் அவர் கைதில் இருக்கும் நாட்களில் பாதியை சுயமே எனது பேனாவால் வெட்டி விட்டதைப் பார்த்தேன். ஆனால், ஹுஸ்ஹாலுக்கு சிறைவாசத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டியது வரும். அவர் கைதில் இருக்கும் நாட்களில் ஒரு நாள் கூட வெட்டப்பட மாட்டாது. பிஷம்பர்தாஸ் கைதில் இருக்கின்ற நாட்கள் பாதியாக குறைக்கப்படுவது துஆவின் விளைவாக நடக்கும். ஆனால் இருவரில் எவருமே குற்றமற்றவராக விடுதலை செய்யப்பட மாட்டார்கள். கண்டிப்பாக வழக்கு பற்றிய தாள் மாவட்டத்திற்கு திரும்பி வரும். ஏற்கெனவே கூறப்பட்டதுதான் முடிவாக இருக்கும் என்று எனக்கு வெளிப்படுத்தப்பட்டது. எனக்கு நினைவில் இருக்கின்றது. இந்த எல்லா விஷயங்களும் நிறைவேறிய போது ஷரம்பத் வியப்பில் ஆழ்ந்து விட்டார். மேலும் நமது இறைவனின் வல்லமையானது அவரை மிகவும் வியப்பிற்குள்ளாகி விட்டது. இந்த எல்லா விஷயங்களும் உங்களது நற்பாக்கியத்தின் காரணமாக நிறைவேறி விட்டது என்று அவர் எனக்கு ஒரு கடிதத் எழுதியிருந்தார். பிறகும்

(தொடர்ச்சி 9-வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இந்த இயக்கத்தின் தொண்டர் மிகவும் விசுவாசத்துடன் தமது அர்ப்பணிப்பை முழுமை செய்த, கட்டுப்படுதல் உடைய மனிதரான அவரைப் பற்றி மிக அதிகமான கருத்துக்கள் திரண்டு விட்டன. அவற்றை மக்கள் அனுப்பி இருக்கிறார்கள். அவற்றை கூறுவதே மிகவும் சிரமமாகும். அவற்றிலிருந்தும் கூட நான் ஒருவேளை ஐந்தில் ஒரு பகுதியைத் தான் குறிப்பிடுவதற்காக எடுத்துள்ளேன். நான் எடுத்ததைக் கூட முழுமையாக என்னால் கூற முடியாது. இந்த சம்பவங்கள் ஒரு வாழ்வை அர்ப்பணித்தவருக்கு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவருக்கு, பொறுப்பாளருக்கு, ஜமாஅத் அன்பர்களுக்கு பல கோணத்தில் வழிக்காட்டத்தக்கதும், பின்பற்றத்தக்கதும் ஆகும்.

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா அஸீஸ் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் மகனான மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய சாஹிப் ஸாதா குலாம் அஹ்மது சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள்.

மதிப்பிற்குரிய மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கொள்ளுப்பேரர் ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மூத்த மகன் மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிப் உடைய பேரர் ஆவார்கள். ஹஸ்ரத் மிர்ஸா அஸீஸ் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் மகன் ஆவார்கள். ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிபின் மகள் வழிப் பேரன் ஆவார்கள். மேலும் எனது சகோதரியின் கணவரும் ஆவார்கள்.

உண்மையில் இந்த உறவுகளை எது குறிப்பிடத் தக்கவையாக ஆக்குகின்றதோ அது அவர்களின் பண்பு ஆகும். அவற்றை நான் எடுத்துக் கூறுவேன். மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களின் புகழ்ந்து கூறத்தக்க நற்பண்புகளை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அன்னாருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப வாழ்வை கழித்தவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். அல்லாஹ் இவர்களின் தகுதியை உயர்த்துவானாக. இவர்களின் பிள்ளைகளுக்கும் இவர்களின் நன்மையில் நிலை நிற்பதற்கும் அதை செய்வதற்கும் வாய்ப்பு வழங்குவானாக. ஒவ்வொரு பொறுப்பாளர்களுக்கும் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர்கள் எவ்வாறு தனது வக்ஃபை நிறைவேற்றினார்களோ அவ்வாறே அல்லாஹ் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. அல்லாஹ் ஜமாஅத்திற்கு வருங்காலத்திலும் அர்ப்பணிப்பு மற்றும் பற்றுடன் பணி செய்யும் ஊழியர்களை வழங்குவானாக.

---

மதிப்பிற்குரிய திபானோ ஃபர்கூத் சாஹிபா அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமாவின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அன்னாருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**9 பிப்ரவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **9 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மூலமாக ஓர் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அதாவது, எந்த மய்யித்துடைய ஜனாஸாவை நூறு முஸ்லிம்கள் தொழுது அனைவரும் அவரது மன்னிப்பிற்காக துஆவும் செய்வார்களோ அவர்களது பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும். (சஹீஹ் முஸ்லிம். கிதாபுல் ஜனாயிஸ் மன் ஸல்ல அலைஹி மிஅதுன் ஷபஊ ∴.பீஹி ஹதீஸ் 2198)

இன்னோர் அறிவிப்பில், ஒரு ஜனாஸாவுக்குச் செல்லும்போது மக்கள் அவரைப் புகழ்ந்து பேசினால் அவருக்கு சுவர்க்கம் கடமையாகி விட்டது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் ஜனாயிஸ் பாபு ஸனா அலல் மய்யிதி ஹதீஸ் 1367)

இன்று இரண்டு ஜனாஸா தொழ வைக்க வேண்டியதிருப்பதால் ஜனாஸா தொழ வைத்தல், கஃபன் மற்றும் அடக்கம் சம்பந்தமான ஹதீஸ்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்கள் மற்றும் மார்க்க சட்ட ரீதியிலான விஷயங்களையும் கூற வேண்டும். அதன் பிறகு மர்ஹூம்கள் பற்றி கூற வேண்டும் என்று எண்ணி இருந்தேன். ஆனால், இன்று அதற்கேற்ப ஹதீஸ்களையும் மேற்கோள்களையும் எடுத்து வைப்பது சாத்தியமில்லை. ஏனென்றால் இந்த இயக்கத்தின் தொண்டர் மிகவும் விசுவாசத்துடன் தமது அர்ப்பணிப்பை முழுமை செய்த, கட்டுப்படுதல் உடைய மனிதரான அவரைப் பற்றி மிக அதிகமான கருத்துக்கள் திரண்டு விட்டன. அவற்றை மக்கள் அனுப்பி இருக்கிறார்கள். அவற்றை கூறுவதே மிகவும் சிரமமாகும். அவற்றிலிருந்தும் கூட நான் ஒருவேளை ஐந்தில் ஒரு பகுதியைத்தான் குறிப்பிடுவதற்காக எடுத்துள்ளேன். நான் எடுத்ததைக் கூட முழுமையாக என்னால் கூற முடியாது. இந்த சம்பவங்கள் ஒரு வாழ்வை அர்ப்பணித்தவருக்கு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவருக்கு, பொறுப்பாளருக்கு, ஜமாஅத் அன்பர்களுக்கு பல கோணத்தில் வழிக்காட்டக் கூடியதும், பின்பற்றத்தக்கதும் ஆகும். அனைவரும் அறிவார்கள். கடந்த நாட்களில் ஹஸ்ரத் மிர்ஸா அஸீஹ் அஹ்மது சாஹிபின் மகனான கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் உரிய சாஹிப் ஸாதா மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். அவருக்கு வயது 78 ஆகி இருந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் வஃபாத் திடீரென்று இருதயம் நின்று விட்டதால் ஏற்பட்டது. அவர்களுக்கு நீண்ட காலமாக இருதயக் கோளாறு இருந்து வந்தது. கார்டியாக் அரெஸ்ட் ஏற்பட்டு விட்டது. இதனால் திடீரென்று வீட்டிலேயே வஃபாத் ஆகி விட்டார்கள். மதிப்பிற்குரிய மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கொள்ளுப்பேரர் ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மூத்த மகன் மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிப் உடைய பேரர் ஆவார்கள். ஹஸ்ரத் மிர்ஸா அஸீஸ் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் மகன் ஆவார்கள். ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிபின் மகள் வழிப் பேரர் ஆவார்கள். மேலும் எனது சகோதரியின் கணவரும் ஆவார்கள். இவரது தாயார் சாஹிப் ஸாதி நயிரா பேகம் அவர்கள், மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிபுடைய மூத்த மகள் ஆவார்கள். உண்மையில் இந்த உறவுகளை எது குறிப்பிடத் தக்கவையாக ஆக்குகின்றதோ அது அவர்களின் பண்பு ஆகும். அவற்றை நான் எடுத்துக் கூறுவேன்.

அன்னார் மார்க்கத் தொண்டரும் வாழ்வை அர்ப்பணித்தவருமாக இருந்தார்கள். பலவீனமாகவும் நோய்யுற்றும் இருந்தபோதும் கூட மூத்த சகோதரரின் வஃபாத் ஏற்பட்ட நிலையில் அன்னாரை நான் நாஸிர் அஃலாவாக நியமித்தேன். எல்லா பொறுப்புகளையும் நல்ல முறையில் நிறைவேற்றினார்கள். அலுவலகத்துக்கு வந்தார்கள். அது போன்று எந்த நிகழ்ச்சி என்றாலும் அதில் கலந்து கொண்டிருந்தார்கள். ஒருநாள் முன்பு மத்ரஸத்துல் ஹிஃப்ஸின் நிகழ்ச்சி நடைபெற்றது. வெற்றி பெற்ற ஹாஃபிஸ்மார்

–களுக்கு சான்று வழங்க வேண்டியிருந்தது. அதில் கலந்து கொண்டார்கள். மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள். வஃபாத் ஆன அன்றும் கூட காலையில் பலரின் வீடுகளுக்குச் சென்றார்கள். நோயாளிகளை நலம் விசாரித்தார்கள். அது போன்று ஐவேளை தொழுகைகளையும் மஸ்ஜித் முபாரக் சென்று தொழுதார்கள்.

இவர்களின் வக்ஃப் உடைய வாழ்வு 1962 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து ஆரம்பமானது. இவர்கள் M.A. Political Science படித்தார்கள். லாஹூரின் Government College –ல் படித்தார்கள். பிறகு இவர்கள் Public Comission தேர்வு எழுதினார்கள். அதில் வெற்றியும் பெற்றார்கள். நல்ல முறையில் வென்றார்கள். அன்னார் என்னிடமே கூறியுள்ளார்கள். நான் இந்த தேர்வை எழுதக் காரணம் மக்கள் இந்த தேர்வில் தேறுவது கஷ்டம் என்று கூறினர். உலகியல் ரீதியாகவும் வென்ற பிறகு வக்ஃப் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். காரணம் இவருக்கு வேறு எங்கு இடம் கிடைக்கவில்லை. அதனால் இங்கு வந்து விட்டார் என்று மக்கள் கூறக் கூடாது என்று நினைத்தேன். பிறகு வெற்றி பெற்ற பிறகும் அரசுப் பணிக்கு செல்லவில்லை. வாழ்வை வக்ஃப் செய்தார்கள். நான் கூறியதுபோன்று 1962 –ல் வக்ஃப் செய்தார்கள். பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ரப்வாவின் Review of Religion –ன் மேனேஜிங் எடிட்டர் ஆக பொறுப்பில் அமர்த்தினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரிடம் உலகியல் கல்வியுடன் இதனையும் பெற்றுள்ளீர்கள். எனவே மார்க்கக் கல்வியையும் கற்றுக் கொள்ளுங்கள் என்றார்கள். அந்த வகையில் மீர் சய்யிது தாவூது அஹ்மது சாஹிபிடம் அன்னார் மார்க்க அறிவைப் பெற்றார்கள். மீர் சய்யிது தாவூது அஹ்மது சாஹிப் Review of Religion –ன் Editor ஆக இருந்தார்கள். உறவு முறையில் இவர்களின் மாமா ஆவார்கள். இவர்களது ஆரம்ப கால பெயர் மிர்ஸா சயீத் அஹ்மது ஆக இருந்து. இவர்களது தாயார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவருக்கு மிர்ஸா குலாம் அஹ்மது என்று பெயர் வைத்தார்கள். இவரது தாயார் சீரத்துல் மஹ்தியில் ஒரு சம்பவம் படித்த பிறகு இவர்களது பெயரை மிர்ஸா சயீத் அஹ்மது என்பதை மாற்றி மிர்ஸா குலாம் அஹ்மது என்று வைக்க வேண்டும் என்று விரும்பினார்கள். மிர்ஸா சயீத் அஹ்மது என்பது அவர்களது முதல் தாயாருக்கு பிறந்த இவரது சகோதரர் ஆவார். அவர் சிறு வயதில் வஃபாத் ஆகி விட்டார். இவர் யூ.கே –வில் படித்தும் வந்தார்கள். மிர்ஸா முஸப்பர் அஹ்மத் சாஹிப் அஹ்மது சாஹிப் அவர்களின் வகுப்புத் தோழரும் ஆவார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அத்துடன் இதனையும் கூறினார்கள். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் ஆக இவரது பெயரை மாற்றினால் வருத்தம் ஏற்படலாம். அவருக்கும் ஆறுதல் ஏற்பட வேண்டும். எனவே இவருக்கு வைக்கிற பெயரினால் இவரது தகப்பனாருக்கும் கூட வருத்தம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று மிர்ஸா குலாம் அஹ்மது என்று வைத்தார்கள். அத்துடன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது கூறினார்கள். இவரை நாம் அஹ்மது என்று அழைப்போம். ஏனெனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத் ஆகி நிறைய காலம் ஆகி விடவில்லை. எனவே குலாம் அஹ்மது என்று கூப்பிடுவது நமக்கு மிகவும் சிரமம். 1964 –ல் எனது சகோதரியுடன் இவர்களுக்கு திருமணம் நடந்தது. மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிப் ஷம்ஸ் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அப்போது நோயுற்றிருந்தார்கள். இவருக்கு 3 மகன்கள் 2 மகள்கள் இருந்தனர். இரு மகன்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். மிர்ஸா பஸ்ல் அஹ்மது ரப்வாவில் நாஸிர் தஃலீம் ஆக உள்ளார். மிர்ஸா நாஸிர் இன்றும் இங்கு யூ.கே ஜாமிஆவில் பிரின்ஸிபல் ஆக இருக்கிறார். மிர்ஸா இஹ்ஸான் அஹ்மது சாஹிப் அமெரிக்காவில் இருக்கிறார். அவர் உலகியல் பணி செய்தாலும் அங்கும் அவர் ஜமாஅத் பணிகளைச் செய்து வருகிறார். தேசிய மஜ்லிஸ் ஆமிலாவில் செக்ரட்டரி மால் ஆக உள்ளார். மேலும் ஜல்ஸா ஸாலானாவின்போது மாநாட்டுத் திடலின் இன்சார்ஜ் ஆகவும் இருக்கிறார்கள். இன்னொரு மகள் அமத்துல் அலி ஸப்தா. இவர் மஷ்ஹூது அஹ்மதின் மகன் மர்ஹூம் மஹ்மூது அஹ்மது சாஹிபின் மனைவி ஆவார். இவரும் வாழ்வை அர்ப்பணித்தவர். இவர் நாஸிர் ஸெஹத் அதாவது தேக ஆரோக்கியத் துறையின் நாஸிர் ஆக இருக்கிறார்.

மிர்ஸா குலாம் அஹ்மத் சாஹிப் உடைய தொண்டுகளாவன: இவர்கள் நாஸிர் தஃலீம் ஆக இருந்தார்கள். உள்ளூர் கூடுதல் நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாது ஆக பல வருடங்கள் இருந்தார்கள். நாஸிர் தீவான் ஆகவும் இருந்தார்கள். நான் இவரை நாஸிர் அஃலாவாக ஆக்கும் வரை இவர் நாஸிர் திவான் ஆகவே இருந்தார்கள். 1996 முதல் 2018 வரை இந்த பொறுப்பில் இருந்தார்கள். சத்ர் மஜ்லிஸ் கார்பர்தாஸ் ஆக 2012 முதல் 2018 வரை இருந்தார்கள். பிறகு மிர்ஸா குர்ஷீது அஹ்மத் சாஹிப் அவர்களின் வஃபாத்துக்குப் பிறகு நான் இவரை நாஸிர் அஃலா மற்றும் உள்ளூர் அமீர் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவாகவும் ஆக்கினேன். அப்பணிகளை செய்து வந்தார். அதற்கு முன்னரும் பொறுப்பு நாஸிர் அஃலாவாக பணியாற்றி உள்ளார்கள். உள்ளூர் அமீர் ஆகவும் பணியாற்றும் வாய்ப்பும் பெற்றிருந்தார்கள். அது போன்று வக்ஃபே ஜதீத் மஜ்லிஸ் உறுப்பினராக இருந்தார்கள். 2016 முதல் 2018 வரை சத்ர் மஜ்லிஸ் வக்ஃபே ஜதீத் ஆக இருந்தார்கள். அன்ஸாருல்லாஹ் விலும் பல பெறுப்புகளை வகித்தார்கள். பாக்கிஸ்தான் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் இரண்டாம் அணியில் நாயிப் சத்ர் ஆக பணியாற்றும் வாய்ப்புப் பெற்றார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் முஹ்தமிம் ஆக இருந்தார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யா மர்கஸிய்யாவில் நாயிப் சத்ர் ஆக ஆனார்கள். Review of Religion உடைய Editor ஆக மீர் தாவூத் அஹ்மத் சாஹிபிற்குப் பிறகு இருந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹின் தனிச் செயலராகவும் இருந்தார்கள். கிலாஃபத் லைப்ரெரி கமிட்டியின் தலைவர் ஆகவும் இருந்தார்கள். புயூதுல் ஹம்து கமிட்டி ரப்வாவின் தலைவராக இருந்தார்கள். ஃபஸ்லே உமர் பவுண்டேஷனின் டைரக்டர் ஆக இருந்தார்கள். ஜல்ஸா ஸாலானாவில் பல வருடம் பணியாற்றினார்கள். ரப்வாவில் மாநாடு நடக்கும் காலம் வரை நாயிப் அஃப்ஸர் ஜல்ஸா ஸாலானாவாகவும் நாயிப் மஹ்னத் ஆகவும் இருந்துள்ளார்கள். நாயிப் மஹ்னத்தில் பல்வேறு பணிகள் உண்டு. பல அஹ்மதி அல்லாத பணியாளர்களை வேலை வாங்க வேண்டி இருக்கும். ரொட்டி சுடுபவர், மாவு பிசைபவர் இருப்பர். இவர்கள் கரடு முரடான இயல்பை உடையவர்களாக இருப்பர். இவர்களை சரியாக கட்டுப்படுத்தி வேலை வாங்குவது மாநாட்டின் பெரும் வேலையாகும். இந்த பணிகளை இவர்கள் நல்ல முறையில் நிறைவேற்றினார்கள். மேலும் தபர்ருகாத் கமிட்டியின் சத்ர் ஆகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்களின் ரிவாயத்துகளின் பதிவேடு கமிட்டியில் உறுப்பினர் ஆக இருந்தார்கள். மார்க்கத் தீர்ப்பு வழங்கும் கமிட்டியின் உறுப்பினராக இருந்தார்கள். மார்க்கத் தீர்ப்பு வழுங்கும் கமிட்டியின் மெம்பர் ஆக இருந்தார்கள் அஹ்மதிய்யத்தின் வரலாற்றை எழுதும் கமிட்டியின் உறுப்பினராக இருந்தார்கள். கிலாஃபத் கமிட்டியின் செக்ரட்டரி ஆகவும் இருந்தார். ஷிர்கத்துல் இஸ்லாமியாவின் மேனேஜிங் டைரக்டர் ஆக இருந்தார்கள். நஸாரத்துடன் சேர்ந்து பல பணிகள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

1989 –ன் இவர்களும், மிர்ஸா குர்ஷித் அஹ்மது சாஹிப் அவர்களும் மற்றும் இன்னும் இரண்டு அஞ்சுமனின் பணியாளர்களும் 298 விதியின் கீழ் இறைவழியில் கைதாகும் வாய்ப்பைப் பெற்றார்கள். 28 மே 2010 –ல் லாஹூரில் நடைபெற அஹ்மதிகள் ஷஹாதத் சம்பவத்தின்போது நாஸிர் அஃலா லாஹூருக்கு ஒரு குழுவை அனுப்பினார்கள். லாஹூர் ஜமாஅத்தின் ஆறுதலுக்காகவும், ஷஹீதுகளின் குடும்பத்தைச் சந்திக்கவும் காயமுற்றவர்களை காண்பதற்காகவும் அந்த குழு சென்றது. அக்குழுவின் அமீராக மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் இருந்தார்கள். ஷஹீதுகள் மருத்துவமனை கொண்டு செல்லப்படும் போதே இவர்கள் அங்கு போய் சேர்ந்தார்கள். அடுத்து அங்கு இரண்டு வாரங்கள் லாஹூரிலேயே தங்கி இருந்தார்கள். எல்லா ஏற்பாடுகளையும் தாமே இருந்து கண்காணித்தார்கள். தாருஸ் ஸிக்ருக்கு இந்த குழு சென்றது. மிகவும் தொலைநோக்குடன் எல்லா பணிகளையும் செய்தார்கள். காயமுற்றவர் –களின் சிகிச்சையைக் கண்காணித்தார்கள். ஷஹீதுகளின் குடும்பத்தார் இடம் சென்றார்கள். தாருஸ் ஸிக்ரில் அதே நாளன்று செயற்குழுவைக் கூட்டினார்கள். அங்கு புதிய அமீரை அறிவிப்பு செய்தார்கள். அங்கேயே மக்ரிப் இஷா தொழுகை நடத்தப்பட்டது. அவர்களே அதனை நடத்தினார்கள். மக்களுக்கு தைரியமூட்டுவதற்காக சம்பவம் நடைபெற்றதனால் பள்ளிவாயிலைக் காலி செய்து விட வேண்டும் என்று மக்கள் நினைக்காமல்

இருப்பதற்காக அவ்வாறு செய்தார்கள். மருத்துவமனைக்கு காயமுற்றவரைச் சந்திக்க சென்றார்கள். அப்போது அங்கு மாநிலத்தின் கவர்னர் சல்மான் தாஸீர் சாஹிப் அங்கு ஆறுதல் கூற வந்திருந்தார். ஆறுதல் கூறும்போது அவரிடம் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் இவ்வாறு கூறினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு எதிராக வெறுப்பை வெளிப்படுத்தும் கருத்துக்கள் கூறப்படுவதால்தான் இது நடந்தது. கவர்னர் என்ற முறையில் இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

அதேபோன்று அந்த மாநிலத்தின் மக்கள் சிறுபான்மைத்துறை விவகாரங்களைக் கவனிக்கும் அமைச்சர் வருத்தம் தெரிவிக்க வந்தார். அவரிடம் அன்னார் மிகவும் தைரியமாகக் கூறினார்கள். நீங்கள் வருத்தம் தெரிவிக்க வந்துள்ளீர்கள். அதற்காக நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். ஆனால் ஒரு விஷயத்தை தெளிவுப்படுத்திக் கொள்கிறோம். நாங்கள் எங்களை ஒருபோதும் சிறுபான்மையினராகக் கருதுவதில்லை. நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். அந்த அமைச்சர் கூறினார். நான் மனித உரிமைகளின் அமைச்சரும் ஆவேன். அந்த அடிப்படையில் வந்துள்ளேன். அன்னார் கூறினார்கள்: நீங்கள் கேபினட்டிலும் குரல் கொடுக்க வேண்டும். ஜமாஅத்துக்கு எதிரான அந்த நடவடிக்கைகளைஅரசாங்கம் நிறுத்த வேண்டும். இவ்வாறு அன்னார் அவர்களது கடமைகளின் பக்கம் கவனமூட்டினாலும் நமது பார்வை எப்போதும் அல்லாஹ்வின் பக்கமே உள்ளது. அவன்தான் இந்த நிலைமைகளை சரி செய்ய வேண்டும் – இன்ஷா அல்லாஹ்.

2010 மே மாதம் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் அன்னார் ஒரு Press Conference நடத்தினார். ஜூன் 2 ஆம் தேதியன்று Express News Live Progrmme –ன் Point பிளாக்கில் இரவு 11.00 முதல் 12.00 மணி வரை கலந்து கொண்டிருந்தார்கள். சுவிஸ் நேஷனல் டி.வி., Voice of America, BBC, Sahara, Channel 5, துனியா டி.வி போன்றவற்றிற்கு நேர்காணல் கொடுத்தார்கள். இவ்வாறு ஜுன் 12 ஆம் தேதி வரை அங்கு தங்கி விட்டு திரும்பி வந்தார்கள். அங்கெல்லாம், நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். நாங்கள் முஸ்லிம்கள் என்பதை எங்களிடமிருந்து எவரும் பறிக்க இயலாது என்று மிகத் தெளிவாகக் கூறினார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது ஒரு குத்பாவில் ஒரு கனவைப் பற்றிக் கூறினார்கள். அதில் இவர்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். அது என்னவென்றால், நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் கூறுகிறார்கள்: சிந்தித்தபோது நான் எனது பணிகளை அதிகரிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. கனவில் நான் மியான் அஹ்மதைப் பார்த்தேன். அதாவது மிர்ஸா குலாம் அஹ்மத் சாஹிபைப் பார்த்தேன். அன்னார் எப்போதும் நல்ல ஆலோசனைகளை தரக்கூடியவர் ஆவார்கள். திருக்குர்ஆன் பற்றி கூட அவர்களின் ஆலோசனைதான், நான் தஃப்ஸீரோ ஸகீருக்குப் பின்னால் குறிப்பு எழுதுவதை விடுத்து புது மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும் என்பதாகும். அல்லாஹ் எனக்கு புதிய தர்ஜுமா செய்வதற்கு வாய்ப்பு தந்தான். அதனால் பல பிரச்சனைகள் தீர்ந்தன. அதற்குப் பிறகு அன்னார் ஒரு நீண்ட கனவைப் பற்றிக் கூறினார்கள். கல்யாண நிகழ்ச்சிகள் மற்றும் ஆண்களின் வேலைகள் பற்றியும் அன்னார் கனவில் தமது ஆலோசனை –களைக் கூறுகிறார்கள். கனவில் மியான் அஹ்மது அவர்கள்தான், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் இவ்விஷயத்தில் உங்களால் உதவி செய்ய முடியும் என்று கூறினார்கள். (அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 19-25 ஜனவரி 2001 பக்கம் 5. ஜுமுஆ குத்பா 15 டிசம்பர் 2000)

அன்னாருக்கு ஒரு கடிதத்தை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எழுதினார்கள். அஹ்மது ஸல்லமஹுல்லாஹ். அஸ்ஸலாமு அலைக்கும். உங்களது துயரம் மிக்க கடிதம் கிடைத்தது. உங்களுக்காக துஆ செய்கிறேன். உங்களது இயல்பில் அல்லாஹ் உண்மை மற்றும் நற்பேற்றை வைத்துள்ளேன். இந்த இரு பண்புகளையும் உடையவரை அல்லாஹ் வீணாக்க மாட்டான். அல்லாஹ் உங்களுக்கு மேலும் மேலும் ஆன்மீக முன்னேற்றங்களைத் தருவானாக. மன நிம்மதியை வழங்குவானாக என்று அதில் எழுதினார்கள்.

அதுபோன்று இன்னொரு கடிதத்தில் அன்னார் எழுதியுள்ளார்கள்: எனது துஆவில் உங்களை நினைவில் வைத்துள்ளேன். மார்க்கப் பணியில் எனக்கு வலிமை மிக்க உதவியாளர்களாக இருக்கிறீர்கள். எப்போதும் அல்லாஹ் உங்களை தனது பாதுகாப்பில் வைப்பானாக. உங்களுக்கு ஆரோக்கியத்தை வழங்குவானாக. எந்த கவலையும் தொல்லையும் வராமல் இருக்கட்டுமாக.

மேலும் எழுதியுள்ளார்கள்: என்னையும் உங்கள் துஆவில் நினைவில் கொள்ளுங்கள். மக்கள் விரைவில் அஹ்மதிய்யத்தை ஏற்க வேண்டும் என்பது எனது கடுமையான ஆசையாகும்.

மேலும் எழுதியுள்ளார்கள்: M.T.A –வின் ஆயுதம் முழு உலகிலும் செல்கிறது. எனது ஆசைகளுக்கு அது செயல் வடிவம் தந்து கொண்டிருக்கின்றது. நல்ல நல்ல நிகழ்ச்சிகளை அனுப்புங்கள். அதன் மூலம் ஒளியே ஒளியாக ஆகட்டும். ஷைத்தானும் அவனது கட்டளைகளும் ரமலானில் முற்றிலும் பிணைக்கப்பட்டுமாக.

அன்னாரது மனைவி அமத்துல் குத்தூஸ் சாஹிபா கூறுகிறார்: ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நோயுற்றிருந்த போது தினமும் இரவில் சென்று அங்கு டியூட்டி கொடுத்தார்கள். இது எங்கள் திருமண உறவுக்கு முந்தைய விஷயமாகும். அதுபோன்று ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் கிலாஃபத்துடன் மிகவும் பற்றுள்ளவராக இருந்தார்கள். ஹுஸூர் இவர்கள் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தார்கள். 1974 –ல் இவர்களும் மிர்ஸா குர்ஷித் அஹ்மது சாஹிப் அவர்களும் பல இரவும் பகலும் அவர்களுடன் இருந்தார்கள். வீட்டுக்கு வரவே அனுமதிக்கப்படவில்லை. 1973–74 –ல் குறிப்பாக –வும் பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சத்ர் ஆக இருக்கும்போது ஹுஸூர் உடன் சேர்ந்து பணி செய்தார்கள். நீண்ட நாட்களாக வீட்டுக்கே வராமல் இருப்பார்கள். காலையில் வீட்டில் இருந்து புறப்பட்டால் ஏறக்குறைய இரவு 10.00 மணிக்கு தான் வீடு திரும்புவார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒருமுறை ஒரு சிறப்பை இவர்களுக்கு வழங்கினார்கள். ஓர் இஜ்திமாவின்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உறுதிமொழியை நீங்களே கூறுங்கள் என்று இவர்களிடம் கட்டளையாகக் கூறினார்கள். இவர்கள் அதனைக் கூற, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பிற குத்தாம்களைப் போன்று பின்னால் நின்று கொண்டு அதனை தாம் திரும்ப மொழிந்தார்கள். மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப் அவர்களின் வஃபாத்தின்போது நான் கூறிருந்தேன். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறினார்கள். இரண்டு பேர் எனக்கு மிகவும் விசுவாசமுள்ளவர்கள். ஒவ்வொரு கிலாஃபத்திற்கும் பற்றுடன் இருப்பவர்கள் என்று அப்போது என்னிடம் இதனை கூறி இருந்தார்கள். ஆனால் எழுதும்போது தமது பெயரை எழுதுவதற்கு அவர்களுக்கு சங்கடமாக இருந்தது. நானும் கூறியிருந்தேன். ஹஸ்ரத் நான்காவது கலீஃபாவும் கூறியிருந்தார்கள். மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப், மிர்ஸா குலாம் அஹ்மத் சாஹிப் இருவரும் எல்லா கிலாஃபத்துடனும் மிகவும்

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

பற்றுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்த வகையில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் தனது தொலைந்துபோன மோதிரத்தைத் தேடி எடுத்துத் தரும் பொறுப்பை மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிபிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் முதலில் எனது பெயரைக் குறிப்பிட்டார்கள். பிறகு குர்ஷிது. இருவரும் எனது பற்றுள்ளவர்களைச் சார்ந்தவர்கள் ஆவீர்கள். ஒவ்வொரு கிலாஃபத்திற்கும் பற்றுள்ளவர்களை சார்ந்தவர்கள் ஆவீர்கள் என்றார்கள்.

பிறகு இவகள்ளது துணைவியாார் கூறுகிறார்: இரவில் இவர்களது தொழுகைகள் மிகவும் உருக்கமாக இருக்கும். வீடு முழுவதும் கேட்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், காலத்தின் கலீஃபா, ஜமாஅத் மற்றும் பெற்றோர் சகோதரி, உறவினர்கள், பிள்ளைகள் அனைவருக்காகவும் துஆ செய்வார்கள். சூரா ஃபாத்திஹாவின் சில வசனங்களை திரும்பத் திரும்ப ஓதுவார்கள். இவர்களுக்கு தமது பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளுடன் நல்ல தொடர்பு இருந்தது. அதில் நேர்மையின்மை இருந்ததில்லை. தமது குடும்பத்தில் மனைவி பற்றியும் நல்ல கண்ணியத்தை தர வைத்தார்கள். இரு உறவுகளிலும் நன்கு சமநிலையைப் பேணினார்கள். சிறு அன்பளிப்பு வழங்கினாலும் அதற்கு நன்றி செலுத்தினார்கள் அல்லது தமது தகுதிக்கேற்ப திருப்பித் தருவார் அல்லது அந்த வீடுகளுக்குச் சென்று நன்றி கூறுவார்கள் அல்லது கடிதம் மூலம் நன்றி தெரிவிப்பார்கள். அவர்களது சிறப்புத் தன்மை என்னவெனில், எந்த பணியை ஒப்படைத்தாலும் அதனை நிறைவேற்றாமல் ஓயமாட்டார்கள். நல்ல அறிவும் ஞாபக சக்தியும் நன்றாக இருந்தது. ஏதாவது ரிவாயத் அல்லது பழைய உறவுகளைப் பற்றி கேட்டால் அவை நன்றாக நினைவில் இருக்கும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு சுற்றுலா செல்வதில் ஆர்வம் உண்டு. அவர்களிடம் வசதி இருந்தாலும் இல்லா விட்டாலும் மனைவியின் உரிமையை தருவதற்காக சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வார்கள்.

அவரது மனைவியும் எனது சகோதரியுமான அவர் கூறுகின்றார்: அப்துர் ரஹ்மான் அன்வர் சாஹிபுடைய மனைவி கூறுகிறார். அப்துர் ரஹ்மான் அன்வர் சாஹிப் கனவில் பார்த்தார். அவரது தாயாரின் வீட்டின் முன் மிகவும் அழகான இரண்டு ரோஜா செடிகள் வளருகின்றன. மிகவும் அழகான பூக்கள் நிறைந்துள்ளன. அல்லாஹ்வின் அருளால் கனவு நிறைவேறியது.


இவர்களது மனைவி எழுதுகிறார்: ஒவ்வொரு வருமானத்தின் போதும் முதலில் சந்தாவைக் கொடுத்து விட்டு பிறகுதான் செலவுக்கு பணம் எடுப்பார்கள். இவர்களது மனைவிக்கும் எனது தந்தையார் தரப்பிலிருந்து சொத்துக்கள் கிடைத்திருந்தன. அதன் சந்தாவை செலுத்தினார்கள். ஹிஸ்ஸா ஜாயிதாத் அதாவது சொத்திற்கான சந்தாவை செலுத்தி விட்டு வந்து என்னிடம் செலுத்தி விட்டதாகக் கூறுவார்கள். இவ்வாறு எல்லா சொத்துக்களுக்கும் உரிய சந்தாவை செலுத்தி எனக்கு எந்த சுமையும் இல்லாமல் செய்து விட்டார்கள். பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வீடு ஏற்பாடு செய்து வழங்கி விட்டார்கள். மேலும் தனது வஸிய்யத்தையும் தானே கொடுத்து வந்தார்கள். எப்போதும் இந்த இரு சகோதரர்களும் ஒன்றாகவே இருப்பார்கள். இதனையும் பலரும் எழுதியுள்ளனர். நானும் பார்த்தே வந்துள்ளேன்.

எனது சகோதரி எழுதியுள்ளார்: மிர்ஸா தாவூது அஹ்மதின் மனைவி கூறுவார்கள். குர்ஷித் மற்றும் மியான் அஹ்மது இருவரும் ஒன்றாக செல்கின்றனர் என்றால் ஏதோ ஜமாஅத் விவகாரம் இருப்பதாக தெரிகிறது. எனவேதான் இருவரும் ஒன்றாக செல்கின்றனர் என்று தோன்றும். எந்த நெருக்கடியான சூழ்நிலை வந்தாலும் அதனை மிகவும் தைரியத்துடன் எதிர்கொள்வார்கள். கிலாஃபத்துடன் அன்பு பற்றி கூறுவதாயின், ஜல்ஸாவுக்கு இங்கு வந்தபோது மிகவும் பலவீனம் இருந்ததால் ஒரு வாக்கிங் ஸ்டிக் வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறியபோது, ஸ்டிக் வைத்துக் கொள்ளுமாறு எனக்கு கட்டளை வந்து விட்டது. எனவே ஸ்டிக் வாங்க வேண்டும் என்று கூறினார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு நாஸிர்மார்கள் அனைவரும் மக்களது வீட்டிற்குச் சென்று எனது ஸலாத்தை தெரிவியுங்கள் என்று நான் கூறியபோது இவர்களது பங்காக சிந்து பகுதி வந்தது. இவர்களது மனைவி கூறுகிறார்: திரும்பி வரும்போது நொண்டிக் கொண்டே வந்தார்கள். நான் கேட்டபோது ஒரு வீட்டின் படியிலிருந்து விழுந்து விட்டதாகக் கூறினார்கள். ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் காட்டியபோது பாதத்திலுள்ள நரம்பு பிசகியுள்ளது. இரண்டாவது காலில் இலேசான வெடிப்பு ஏற்பட்டிருந்தது. உங்களுக்கு வலிக்கவில்லையா? என்று நான் கேட்ட போது, வலிக்கத்தான் செய்தது. ஆனால் காலத்தின் கலீஃபாவின் தூதுச் செய்தியை வீடுகளில் சேர்க்க வேண்டும். எனவே 11 நாட்கள் அந்த வலியை பொருட்படுத்தவில்லை. எனது பணியை முடித்து விட்டு வந்துள்ளேன் என்றார்கள்.

இவர்களது மூத்த மகன் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஹிஜ்ரத் செய்த பிறகு ஹுஸூர் அவர்களுடைய குத்பா கேசட் முதலில் இவர்களுக்குதான் வரும். இவர்கள்தான் எல்லாரையும் ஒன்று கூட்டி ஹுஸூர் அவர்களின் குத்பாவை கேட்க வைப்பார்கள். M.T.A வந்த பிறகும் கூட குத்பாவை கேட்க அதிகமாக முயற்சி எடுப்பார்கள். வீட்டிலுள்ள எல்லாரும் குத்பா கேட்க வைக்க விரும்புவார். வீட்டிலுள்ளவர் மட்டுமின்றி வேலைக்குச் செல்லும் பணியாளர்களையும் கேட்க வைப்பதற்கு வெளியே Loudspeaker வைத்திருந்தார்கள்.

லாஹூருக்கு அன்னார் சென்றிருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தை அவர்களது மகன் எழுதுகிறார்: இரவில் மருத்துவமனையில் அதிக கூட்டம் இருந்தது. ஆம்புலன்ஸ்காரர்கள் சொன்னதுதான் விலையாக இருந்தது. அங்கு அன்னார் உரத்த குரலில் அறிவித்தார்கள். அனைத்து ஏற்பாடுகளையும் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா செய்யும். எல்லா ஜனாஸாவும் ரப்வாவில் அடக்கம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்படும். எவரையாவது அவரது சொந்த ஊருக்கு எடுத்துச் செல்ல விரும்பினால் அதற்கு அனுமதி உண்டு என்றார். இதனால் மக்களுக்கு நிம்மதி பிறந்தது. ஒவ்வொரு காயமடைந்தவரின் வீட்டிற்கும் சென்றார்கள். அவர்களது வீட்டில் உணவிற்கான ஏற்பாடு செய்தார்கள். சம்பாதிப்பவர் இல்லாத வீட்டில் உணவிற்கான ஏற்பாடு செய்தார்கள். சிலர் பின்தொடர்பவதாகச் செய்தி வந்தது. ஏஜென்ஸிகள் தரப்பிலிருந்து இவர்களது உயிருக்கு ஆபத்து என்றும் கூறப்பட்டது. அங்கிருந்து அவர்கள் அழைக்கப்பட்டார்கள். ஆனால் மே மாதம் 28 ஆம் தேதிக்குப் பிறகு அடுத்த ஜுமுஆவுக்கு தாருல் ஸிக்ர் சென்று ஜமாஅத் மக்களுக்கு தைரியம் ஏற்படுவதற்காக தாமே தொழுகை நடத்தினார்கள். ஏழைகளை கவனிப்பார்கள். பழைய நண்பர்களை கவனத்தில் கொள்வார்கள். சிறு வயதில் ஒன்றாக படித்து பிறகு படிப்பை தொடர முடியாமல் பெயிண்டிங் வேலை செய்தவரின் பிள்ளைகளை கவனித்தார்கள். 1989 –ல் இவர்கள் கைது செய்யப்பட்டபோது அதுவும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமா நடந்தபோது மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப் நாஸிர் உமூரே ஆமா அவர்கள் ரப்வாவுக்கு வெளியில் இருந்தார்கள். அதனால் இவர்கள் அன்னாரின் பொறுப்பில் இருந்தார்கள். மாஜிஸ்ரேட் இவர்களை அழைத்து இஜ்திமாவை நிறுத்துமாறு கூறினார். இவர்கள், நீங்கள் எழுத்துப் பூர்வமாக அனுமதி தந்துள்ளீர்கள்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

இப்போது நிறுத்துமாறு எழுத்து மூலமாக கூறினால் நிறுத்துகிறோம் என்று கூறினார்கள். அவர் முடியாது; வாய்வழியாகத்தான் கூறுவோம். நீங்கள் இஜ்திமாவை நிறுத்துங்கள் என்றார். அப்படியென்றால் நிறுத்த மாட்டோம் என்றார்கள். மாலையில் மிர்ஸா குர்ஷித் அஹ்மது சாஹிப் வந்து விட்டார்கள். அவரை கூப்பிட்டார்கள். அவர்களும் சென்று இதனையே கூறினார்கள். இதன் விளைவாக சில நாட்களுக்கு இவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இவர்களது மகள் கூறுகிறார்: கிலாஃபத்திற்கு பற்று நன்றியுணர்வுடன் இருக்க எனது தந்தையார் மிகவும் முயன்று வந்தார்கள். எங்களுக்கும் அதனையே போதித்தார்கள். அவர் கூறுகிறார்: ஒருமுறை எங்கள் தந்தையார் மிகவும் துடிப்புடன் துஆ செய்யுமாறு கூறினார்கள். பலமுறை அவர்கள் அவ்வாறு சொல்லிக் கொண்டே இருந்தார்கள். என்ன விவகாரம் என்பது தெரியாது. காலத்தின் கலீஃபாவிடம் இருந்து ஒரு சிறு கோபம் வெளிப்பட்டிருந்தது. அதற்காகவே அந்த தாக்கம் இருந்தது என்பது பிறகுதான் தெரிய வந்தது. அதனால் எனது தந்தைக்கு தொழுகைகளில் எவ்வளவு உருக்கம் இருந்தது என்றால் அதன் தாக்கம் என் மீதும் ஏற்பட்டது. எனக்கும் அதே நிலை ஏற்பட்டது.

பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஹிஜ்ரத் செய்தபோது அவர்களது தாயார் சாஹிப் ஸாதி நஸிரா பேகம் சாஹிபா நோயுற்றிருந்தார்கள். மிகவும் பலவீனமாக இருந்தார்கள். ஹிஜ்ரத் செய்த அதே இரவுதான் அவர்களின் கடைசி இரவு என்று தெரிந்தது. அன்னாரோ ஹுஸூர் அவர்களுடைய ஹிஜ்ரத் சம்பந்தமான பணிகளில் மூழ்கியிருந்தார்கள். எனவே தாயார் இருந்த அறையின் பக்கம் கூட செல்லவில்லை. ஜமாஅத் பணியில் மூழ்கி இருந்தார்கள். ஐந்தாவது கிலாஃபத்திலும் சரி என்னுடன் அன்னார் கட்டுப்படுதல் மற்றும் விசுவாசம் காட்டுபவராக இருந்தார்கள்.

அவர்களுடைய மகனிடம் கேட்டபோது அவரும் இதனையே கூறினார். ஐந்தாவது கிலாஃபத்துடன் இறைவனின் உதவிகள் எவ்வாறு உள்ளது என்பதை நீ பார்க்கவில்லையா? என்று என்னிடம் கூறுவார்கள் என அவர்களது மகன் எழுதுகிறார். எங்களை தொழுகைக்கு எழுப்பும் போது கடுமையாக இருப்பார்கள். கடைசி நாட்களில் எவ்வளவு மென்மையாக எழுப்பினார்கள் எனில் அவர்களிடமிருந்து கருணை வெளிப்பட்டது. கலீஃபாவிடம் இருந்து வந்த அனைத்து கடிதங்களையும் அதாவது இவர்களுக்கும் அவர்களுடைய மனைவிக்கும் வந்ததை பிரதி எடுத்து File ஆக்கி எங்களிடம் தந்து, வாழ்நாள் முழுவதும் இதனை பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்றும் கூறி தந்தார்கள்.

மிர்ஸா அனஸ் அஹ்மத் சாஹிப் கூறுகிறார்கள்: இவர்கள் வஃபாத் ஆன பிறகு நான் கனவு கண்டேன். குர்ஷீது அஹ்மது சாஹிபும், மிர்ஸா அஹ்மது சாஹிப் இருவரும் அல்லாஹ்விடம் சென்று விட்டனர். அங்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருவரையும் சந்திக்கிறார்கள். இதனை பார்த்தபோது அல்லாஹ் எனக்கும் அதுபோன்று நிலைமையை ஏற்படுத்துவானாக என்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே நான் கூறினேன். அல்லாஹ்வே என்னையும் உனது நெருக்கத்தில் எடுத்துக் கொள். உடனே அல்லாஹ், நீயும் முன்னாடி வா என்று கூறுகின்றான். அவர் கூறுகிறார்: மியான் அஹ்மது சாஹிப் மற்றும் நான் ஆரம்பத்திலிருந்தே தொடர்புடையவர்கள்; கிட்டத்தட்ட ஒத்த வயதை உடையவர்கள் ஆவோம். அவர்களது நன்மை –களைப் பார்த்து வெட்கப்படுகிறேன். அல்லாஹ் எனக்கு அந்த வாய்ப்பை தருவானாக. ஏதாவது விஷயத்தில் கோபப்பட்டாலும் மன்னிப்பதில் முந்திக் கொள்பவராக இருந்தார்கள்.

மேலும், இவர்களது தொழுகைகளைப் பற்றி கூறுகிறார்கள்: இவர்கள் தொழும்போது எவ்வளவு அழுது அழுது தொழுவார்கள் எனில் எனக்கு பொறாமையாக இருக்கும். மிகவும் புத்திக்கூர்மை உடையவர்கள். ஐவேளை பள்ளிவாயிலுக்குச் செல்வது, ஏழைகளுக்கு உதவுவது. அவர்களுக்கு பயன்படுவது, தனது ஆற்றல்களை இறைவழியில் செலவு செய்வது இவற்றை அன்னார் பெற்றிருந்தார்கள்.


சவுத்ரி ஹமீதுல்லாஹ் சாஹிப் எழுதுகிறார் –கள்: இவர் விவகாரங்களை நன்கு புரிகின்றவரும் நல்ல ஆலோசனைகளை வழங்குபவரும் ஆவார். எப்போதும் இவர்களது கருத்து கிழக்கத்திய மஜ்லிஸ்களில் ஏற்புடையதாக இருக்கும். ஜமாஅத்தின் படைப்புகள் குறித்து நன்கு அறிந்திருந்தார்கள். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சேவைக்காக முன்னால் நிற்பவராக இருந்தார். 1974 –ல் குழப்பம் நடந்தபோது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபாவிற்கு முழு ஒத்துழைப்பு நல்கினார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபாவுடன் வெளிநாடுளுக்குச் சென்றுள்ளார்கள். ஒருமுறை மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மர்கஸியாவின் பிரதிநிதியாக ஹுஸூருடன் சென்றார்கள்.

காதியானைச் சார்ந்த அக்ரம் சாஹிப் என்ற இவர்களது ஊழியர் எழுதுகிறார்: நான் ஹஸ்ரத் குர்ஷித் அஹ்மது சாஹிப் வஃபாத்தின்போது மிகவும் ஆதங்கப்பட்டேன். அப்போது அன்னார் கூறினார். நீங்கள் காதியானில் எனக்காகவும் மற்ற பெரியவர்களிடமும் துஆ செய்யுமாறு கூறுங்கள். ஏனெனில் குர்ஷித் உடைய வஃபாத்திற்கு பிறகு நான் தனியாக இருப்பதாக உணர்கிறேன். அல்லாஹ் எனக்கு தந்துள்ள புதிய பொறுப்புகளை சரியாக செய்வதற்கு தவ்ஃபீக்கும் தருவானாக. எப்போதும் துஆவுக்காக கூறுவார்கள். எப்போது காதியானுக்குச் சென்றாலும் தர்வேஷ்களின் வீடுகளுக்குச் செல்வார்கள். இதுபோன்று, அனாதைகள் ஏழைகள் போன்றவருக்கு சேவை செய்ய விரும்புவார்கள். காதியானின் புனிதஸ்தலங்கள் குறித்து அதிக அறிவு இருந்தது.


அக்ரம் சாஹிப் எழுதுகிறார்கள்: காதியான் சென்று அங்கு நஃபில் தொழுவார்கள். எனக்கும் போதனை செய்வார்கள். நீங்கள் நற்பேறு பெற்றவர்கள். புனிதஸ்தலத்தில் வசிக்கின்றீர்கள். எனவே இங்கு அதிகமாக துஆ செய்யுங்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சத்ர் ஆக அதிகமாக பணி செய்துள்ளார்கள். எப்போதும் குத்தாம்களிடம் செல்வார்கள். இவர் ஒருமுறை சிந்து வந்தபோது சில இடங்களில் கார் செல்ல முடியவில்லை. அங்கு நடந்து போய் காடுகளை கடந்து குத்தாமை சந்தித்தார்கள். இது குத்தாம்களிடம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. இதுவரை அவர்கள் அதனை நினைவில் கொள்கின்றனர்.

அதுபோன்று வரலாறு எழுதும் குழுவின் தலைவரான அஸ்ஃபந்யார் முனீஃப் சாஹிப் எழுதுகிறார்: அஹ்மதிய்யத்தின் வரலாற்றை எழுதுவதில் இவர்கள் பயனுள்ள ஒரு மனிதராக இருந்தார்கள். ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் என்பதால் மிக நுட்பமாக கவனித்து மிகவும் பயனுள்ள மதிப்புமிக்க ஆலோசனை –களைத் தந்து வழிகாட்டுவார். வரலாறு சம்பந்தமாக பல சம்பவங்களை தாமே சுயமாக அறிந்து வைத்திருந்தார்கள்.

இவர்கள் நாஸிர் அஃலாவாக நியமிக்கப்பட்டு அந்த அறைக்குள் சென்று உலுயாவின் நாற்காலியில் அமர்ந்திருந்த போது அவர்களின் நிலை எப்படி இருந்தது என்று மிர்ஸா முஹம்மது தீன் நாஸ் சாஹிப் எழுதுகிறார்: இவர்கள் கூடுதல் நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாது தஃலீமுல் குர்ஆன். இவர்களின் கண்களின் கண்ணீர் நிறைந்திருந்தது. துஆவில் மூழ்கிய முகம்; மிகவும்

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house A/c
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company, Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

பணிவுடன் என்னிடமும் துஆவுக்காக கூறினார்கள்.

குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சத்ர் ஆன ஸாயித் குரைஷி சாஹிப் கூறுகிறார்: லாஹூர் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஒருமுறை ஒரு பணிக்காக என்னை இவரிடம் அனுப்பினார். நான் அலுவலகம் சென்று இவர்களை சந்தித்து காகிதங்களை அவர்களிடம் ஒப்படைத்தேன். அப்போது அதிக வெயில் அடிக்கும் மதிய வேளையாகும். அவர்கள் காகிதங்களை வாங்கிய பிறகு என்னிடம் உணவு உண்டீர்களா என்று கேட்டார். வேலை முடிந்ததும் விருந்தினர் பகுதி சென்று சாப்பிடுவேன் என்று கூறினேன். அப்போது அன்னார், என்னுடன் வாருங்கள் என்று கூறினார்கள். நான் அங்கேயே அய்வானே மஹ்மூதில் உணவு பரிமாறப்படும் என்று நினைத்தேன். சிறிது நேரம் கழித்து வெளியே வந்தார்கள். சைக்கிள் எடுத்து என் பின்னால் அமருங்கள் என்றார்கள். ஓட்டிக் கொண்டு செல்லும்போது வழியில் நான் விருந்தினர் இல்லத்தில் இறக்குமாறு கூறினேன். அவர்கள் பின்னால் உட்காருங்கள். வீட்டில் சென்று சாப்பிடலாம் என்றார்கள். கடுமையான வெயிலில் வீட்டிற்குச் சைக்கிளில் அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்று உணவளித்தார்கள்.

ஒவ்வொரு காதிமுடனும் நல்ல தொடர்பு இருந்தது. சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யா என்ற முறையில் இதுபோன்ற பல துறைகளைச் சார்ந்தவர்கள் எழுதி இருக்கின்றனர். இவர்களது பணி செய்யும் விதம், வழிமுறை குறித்து எழுதியுள்ளனர். மிகவும் ஆழமாக சென்று பணி செய்யும் வழக்கம் இருந்தது.

டாக்டர் சுல்தான் முபஷ்ஷிர் சாஹிப் எழுதுகிறார்: 1984 –ல் Ordinance –க்குப் பிறகு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டபோது அதன் பொறுப்பு மியான் அஹ்மது சாஹிபிடம் இருந்தது. மியான் சாஹிப் என்னிடம் கூறினார்கள். லாஹூர் நீதிமன்றத்தில் புத்தகங்கள் தேவைப்படுகிறது. அதனை இங்கு நூலகத்திலிருந்துதான் எடுத்து செல்ல வேண்டும். நீங்கள் எடுத்து செல்லுங்கள். என்ன புத்தகங்கள் தேவைப்பட்டதோ அவர்கள் லாஹூரிலிருந்து போன் செய்து ரப்வாவிற்கு கூறுவார்கள். பிறகு அந்த நூலகப் பணியாளர்களுடன் தாமும் இறங்கி நூல்களை அங்கிருந்து தேடி எடுப்பார்கள். சொல்லி விட்டோம் என்று போய்விடவில்லை. சுயமே நின்று பணி செய்ய வைக்கும் பழக்கம் இருந்தது. அனாதைகள் மற்றும் விதவைகள் கவனத்தில் கொள்வார்கள்.

டாக்டர் சாஹிப் கூறுகிறார்: இன்று கூட வெளியிலுள்ள ஒரு பெண் ரப்வாவில் இருப்பவர் வந்தார். அவர் Suger, Bloof Pressure உள்ளவர். இப்போது உமக்கு அல்லாஹ்வின் அருளால் Result - Normal ஆக உள்ளது என்று கூறியபோது அழுதார். நான் ஆச்சரியத்துடன் பார்த்தேன். அப்போது அவர் உடைந்த குரலில் கூறினார். டாக்டர் சாஹிப் எனது நோய் குணமாகி விட்டது. ஆனால் எனக்கு இலவசமாக வைத்தியம் செய்ய வைத்த இருவரும் அதாவது மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப், மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் இவ்வுலகத்தை விட்டு சென்று விட்டார்களே என்றார். நான் அவருக்கு ஆறுதல் சொன்னேன். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் அமைப்பின் கீழ் உனது சிகிச்சை தொடரும் என்றேன். பிறகு அப்பெண் மிகவும் அழுது கொண்டு அவ்விருவரையும் ஞாபகம் செய்து கொண்டு இருந்தார்.

அதாவுல் முஜீப் ராஷித் சாஹிப் இலண்டன் மஸ்ஜித் ஃபஸ்ல் பள்ளிவாயிலின் இமாம் கூறுகிறார். 1973 –ன் இறுதியில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் என்னை கிழக்குப் பகுதியில் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஷூராவிற்குப் பிறகு என்னை குத்தாமுல் அஹ்மதிய்யா மர்காஸிய்யா சத்ர் ஆக நியமித்தார்கள். நான் எனது மஜ்லிஸ் ஆமிலாவில் அவர்களது பரந்த அனுபவம் காரணத்தினால் நாயிப் சத்ர் ஆக்குமாறு பரிந்துரைத்திருந்தேன். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் தமது அறிவு, அனுபவம், வயது அடிப்படையில் மிகவும் சீனியர் ஆவார். அவர்களை நாயிப் சத்ர் ஆக ஆக்கப்பட்டிருந்தது. அன்னார் மிகவும் எளிமையுடன் எனது பணிகளில் ஒத்துழைப்பு நல்கிறார்கள். எந்த இடத்திலும் தாம் மிகவும் சீனியர் என்று தம்மை வெளிப்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டதில்லை.

ஷாஹித் அப்பாஸ் சாஹிப் மலேசியாவிலிருந்து எழுதுகிறார்: 2005 ல் நான் பைஅத் செய்தேன். மர்கஸிற்கு ஸியாரத்துக்காக சென்றிருந்தேன். அலுவலகத்துக்கு மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் வருகிறார்கள். என்னுடன் வந்த முஅல்லிம் தானியால் சாஹிப் கூறினார். இவர் காலத்தின் கலீஃபாவிற்கு நெருங்கி உறவினர். இவர்களிடம் துஆக்கள் கூறுங்கள். நான் அவர்களிடம் சென்று கூறினேன். நான் ஷியா பிரிவிலிருந்து ஜமாஅத்தே அஹ்மதிய்யாவில் இணைந்துள்ளேன். எனக்காக துஆ செய்யுங்கள். என்னை கட்டி அணைத்தார்கள். என் கையைப் பற்றியவாறு கூறினார்கள். நானும் ஒருவரிடம் துஆக்காக கூறுகிறேன். அவர்களிடம் துஆவுக்காக கூறுங்கள் என்றார்கள். பிறகு நீங்கள் காலத்தின் கலீஃபாவிற்கு துஆவுக்காக எழுதுங்கள் என்றார்கள். அந்த புதிதாக பைஅத் செய்தவர் கூறுகிறார்: அவர்களிடம் முகத்தில் காலத்தின் கலீஃபாவின் மீது ஓர் அன்பை பார்த்தேன். அது பார்க்கத்தக்கதாக இருந்தது. அது இப்போதும் என் பார்வையில் தென்படுகிறது.

இங்கு அரபி டெஸ்கின் முரப்பி அஞ்சம் பர்வேஸ் சாஹிப் எழுதுகிறார்கள்: ஒருவர் சவுத்ரி முஹம்மது அலி சாஹிப் கூறினார்கள். ஒருமுறை கடும் வெயில் காலத்தில் மதிய வேளையில் சைக்களில் யாரையோ தேடிக் கொண்டிருந்தார்கள். இவ்வளவு வேகமாக யாரைத் தேடுகிறீர்கள் என்று நான் கேட்டபோது, நான் ஒருவருக்கு தவறான ஹோமியோபதி மருந்தை கொடுத்து விட்டேன். அதனை அவர் உண்டு விடக் கூடாது. அவருக்கு சரியான மருந்தை தருவதற்காக தேடுகிறேன். அவர் கிடைக்கவில்லை என்றார்கள்.

பல்வேறு இடங்களில் பல பெறுப்புகள் இவர்களிடம் இருந்தன. அதனை நல்ல முறையில் நிறைவேற்றினார்கள். நிறைய சம்பவங்களை மக்கள் எழுதியுள்ளனர். அதுபோன்று அலுவலகத்தில் வேலை செய்பவர்களிடம் மிகவும் மென்மையுடன் அன்புடன் வேலை வாங்குவார்கள். கஷ்டப்படுபவர்களுக்கு அவர்களது கஷ்டங்களை அகற்றுவார்கள். விஷயத்தின் அடி ஆழம் வரை மிக விரைவாக சென்று விடும் தகுதியை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருந்தான். நான் ஏறக்குறைய கூறியதுபோன்று உடனே பணியை முடிக்கவும் செய்வார்கள்.

இதுபோன்று ஒருமுறை அலுவலகத்துக்கு சில இளைஞர்கள் வந்தனர். மரணத்திற்கு சில நாட்கள் முன்பு பாதுகாப்பு பணியாளர்கள் அவர்களின் மீது கடுமை காட்டி விட்டார்கள். இதனால் ஒருவருக்கு காயம் ஏற்பட்டு விட்டு விட்டது. இவர்கள் வந்து பார்த்தபோது அன்னார் கேட்டார்கள். மருத்துவமனைக்கு சென்றீர்களா? அவர் இல்லை என்றார். உடனே மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுங்கள். இன்று அலுவலகம் விடுமுறையாகும். எனவே நாளை இதனை யார் செய்தார்களோ அவர்கள் மீது நான் நடவடிக்கை எடுப்பேன் என்றார்கள். உடனே நடவடிக்கை எடுத்தார்கள். அவரை மருத்துவமனக்கு அழைத்துச் செல்ல வைத்தார்கள்.

இக்பால் பஷீர் சாஹிப் கூறுகிறார்: மியான் அஹ்மது சாஹிப் நாஸிர் திவான் ஆக்கப்பட்டபோது அலுவலகத்தில் பணியாளர்கள் மிகவும் குறைவாகும். இரண்டு கிளார்க் மட்டுமே இருந்தனர். மேலும் ஒரு உதவியாளர் உள்ளார். அப்போது வேலை அதிகமாகி விட்டால் பெரும்பாலான நேரங்களில் அஹ்மது சாஹிப் எங்கள் கூட அமர்ந்து கடிதங்களை பதிவு செய்வார்கள்.

முரப்பியாக இருந்து ஓய்வு பெற்ற ரியாஸ் மஹ்மூத் பாஜ்வா சாஹிப் கூறுகிறார்: ஒருமுறை இவர்கள் அலுவலகத்தில் அமர்ந்திருந்தபோது பேச்சிற்கிடையில் மியான் சாஹிப் பேச்சில் கடுமை ஏற்பட்டது. பொதுவாக ஏற்படும் விடுகிறது. அதனால் எனக்கு எந்த வருத்தமும் ஏற்படவும் இல்லை. நான் வீட்டுக்கு வந்து விட்டேன். மாலையில் என் வீட்டின் கதவு தட்டப்பட்டது. திறந்தபோது அங்கே மியான் சாஹிப் நின்றார்கள். பார்த்ததும் எனக்கு வியப்பாகி விட்டது. அவர்கள் என்னிடம் இன்று அலுவலகத்தில் கடுமையான வார்த்தைகளில் கூறி விட்டேன். அதற்காக மன்னிப்பு கேட்க வந்துள்ளேன் என்று கூறினார்கள். அவர்களின் இந்த நடைமுறை நான் எதிர்பாராததாக இருந்தது. அதிலிருந்து நான் அவர்களை ஏற்றுக் கொண்டேன். ஒருமுறை ஒரு சாதாரண பணியாளர், என்னை முதலில் கடிந்தார். பிறகு மன்னிப்பு கேட்டார்கள் என்று எழுதியுள்ளார்.

அதுபோன்று இன்னொரு சம்பவத்தை ஒருவர் எழுதியுள்ளார்: நான் ஒரு தவறு செய்து விட்டேன். அதற்கு அன்னார் எச்சரித்தார்கள். நான் வீட்டில் அமர்ந்து பாவமன்னிப்புத் தேடிக்

கொண்டிருந்தேன். அப்போது கதவு தட்டப்பட்டது. நான் வெளியில் சென்றபோது மியான் சாஹிப் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது மியான் சாஹிப் கூறினார்கள்: இன்று கடுமையான வார்த்தையைக் கூறி விட்டேன். அதற்காக மன்னிக்க வேண்டும் என்று கூறி விட்டு காரில் ஏறிச் சென்று விட்டார்கள்.

முபஷ்ஷிர் அயாஸ் சாஹிப் கூறுகின்றார்: நான் காலித் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தேன். ஆஸ்திரேலியாவின் மஹ்மூது பங்காளி சாஹிப் மர்ஹூம் அங்கு வந்திருந்தார். அவரே நேர்காணல் செய்தோம். அன்னார் ஒரு சம்பவத்தை கூறினார்கள். மியான் அஹ்மது சாஹிப் சத்ர் ஆக இருந்தபோது அன்னார் நாஸிர் அஃலாவாக இருந்தார்கள். தர்பிய்யத் வகுப்பு நடைபெற்றது. வகுப்பு முடிந்து பட்ஜெட்டை எடுத்து வைத்தபோது பட்ஜெட்டை விட அதிகம் செலவாகி இருந்தது. அதிகம் என்பது சில பைச்சாக்கள் ஆகும். சத்ர் சாஹிப் தரப்பிலிருந்து பில் மறுக்கப்பட்டது. நான் அவர்களிடம் சென்றேன். சில அனாக்கள் அதிகமாகி விட்டது. அது ஒரு பெரும் தொகை அல்ல. நீங்கள் தராவிட்டால் அதனை என் பாக்கெட்டில் இருந்து செலவு செய்து கொள்கிறேன் என்றேன்.

அவர்கள் கூறினார்கள்: பாக்கெட்டில் இருந்து செலவு செய்வது அல்ல பிரச்சனை. அசல் விஷயம் என்னவென்றால் நான் புரிய வைக்க விரும்புவது என்னவென்றால் ஜமாஅத் பொருளை செலவு செய்வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஜமாஅத்தின் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். அமைப்பு இருக்கிறது. தேவை அதிகம் என்றால் முதலில் அனுமதி வாங்கி விட்டு பிறகு செலவு செய்ய வேண்டும்.

பங்காளி சாஹிப் கூறுகிறார்: அவர்கள் இவ்வாறு பிடித்த பிறகு பல வேளைகளில் எனக்கு அது பயனுள்ளதாக இருந்தது. கிலாஃபத்துடன் பெரும் தொடர்பு இருந்தது. ஒருமுறை மார்க்கத் தீர்ப்பு வழங்கும் கமிட்டியின் ஒரு விவாதம் ஸக்காத் தொடர்பாக நடந்தது. குதிரைக்கான ஸக்காத்தை ஆநேகமாக ஒன்றுமே இல்லை என்பது போன்று அறிக்கை தந்திருந்தார்கள். நான் அதனை திரும்ப ஆய்வு செய்யுமாறு எழுதி விட்டேன். அதனை ஆய்வு செய்யுமாறு கூறினேன். ஆலிம்கள் தரப்பிலிருந்து அதிகமான விவாதங்கள் நடந்தன. முடிவு வரவில்லை. இவர்களை கமிட்டியின் சத்ர் ஆக நியமித்தேன். நான் கூறியதை மாற்றுவதற்கு ஆலிம்கள் நிறைய ஆயத்தங்களுடன் வந்திருந்தனர். சிறிது நேரம் அவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். முபஷ்ஷிர் அயாஸ் சாஹிப் கூறுகிறார்: இவர்கள் பிறகு மிகவும் கம்பீரமாகக் கூறினார்கள். காலத்தின் கலீஃபா முடிவு செய்து விட்டார்கள். பிறகு நாம் ஏன் அதனை ரத்து செய்வதற்கு யோசிக்க வேண்டும்? என்று கூறியவாறு அனைத்து சான்றுகளையும் மறுத்து விட்டார்கள். எவர் ஆலிம்? எவர் என்ன கூறுகிறார் என்று பார்க்கவில்லை.

அஹ்மதிய்யா வரலாறு மற்றும் வரலாற்றுச் சம்பவங்களின் Encylopedia (அறிவுக்களஞ்சியம்) ஆக இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வரலாற்றை நான் எழுதுகிறேன். அதில் ஏதாவது பிரச்சனை வந்தால் அவர்களிடமே செல்வேன். நல்ல ஆதாரப் பூர்வமான அழுத்தமான ஆதாரங்கள் கிடைக்கும். அதுபோன்று காதியானின் இடங்கள் சம்பந்தமாக நல்ல அறிவு அவர்களுக்கு இருந்தது. காதியானில் எவராவது வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை காட்டித் தருமாறு கூறினால் மிகவும் மகிழ்ச்சியுடன் விளக்கிக் காண்பிப்பார்கள். ஒருமுறை நோயுற்றிருந்தார்கள். காலில் வலி இருந்தது. பிறகும் கூட யாருக்கும் தெரிவிக்கவில்லை. படி ஏறும்போது நாங்கள் உணர்ந்தோம். எனக்கு கஷ்டமாக உள்ளது என்று அவர்கள் கூறவில்லை. பிறகு ஏன் இவர்களுக்கு கஷ்டம் தந்தோம் என்று எங்களுக்கே வெட்கம் ஏற்பட்டது என்று முபஷ்ஷிர் அயாஸ் சாஹிப் கூறுகிறார்.

அதுபோன்று இன்னும் பல விஷயங்கள் உள்ளன. ஜமாஅத்தின் பணிக்காக எங்கு அனுப்பினாலும் வழியில் என்ன கஷ்டம் என்று பார்த்ததில்லை. ஒருமுறை ஜமாஅத் விஷயமாக இரு ஆப்பிரிக்கன் அஹ்மதிகளுக்கிடையில் சண்டை வந்து விட்டது. இவர்கள் அனுப்பப்பட்டார்கள். வழி பழுதடைந்திருந்தது. காரில் செல்ல முடியவில்லை. பிறகு மிர்ஸா குர்ஷித் அஹ்மது சாஹிப், மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் இருவரும் முரப்பிமார்களுடன் டிராலியில் அமர்ந்து அங்கு சென்றார்கள். வழியில் ஓர் இடத்தில் டிராலியும் செல்ல முடியாமல் இருந்தது. அங்கு செல்வது ஆபத்தாக இருந்தது. அங்கேயே இறங்கி நடந்தே போய் அவர்களை மஸ்ஜிதிற்கு அழைத்து தீர்ப்பு அளித்தார்கள். துஆவும் செய்தார்கள். தூரத்தில் இருந்து மிகவும் கஷ்டப்பட்டு வந்துள்ளனர் என்ற உணர்வு மக்களுக்கும் ஏற்பட்டது. இவ்வாறு வருடக் கணக்கில் நடந்த பிரச்சனை இவர்களின் நடைமுறை மற்றும் துஆவினால் தீர்ந்தது.

இன்னும் அதிகமான சம்பவங்கள் உள்ளன. சில சம்பவங்கள் ஒரே மாதிரியானவை. சில புதிய சம்பவங்கள். அனைத்தையும் கூற நேரமில்லை. ஊழியர்களுடன் அன்புடன் பழகினார் என்பதனை எல்லாரும் எழுதியுள்ளனர். சிறு சிறு தேவைகளை கவனத்தில் கொள்வார்கள்.

பிறகு நாயிப் நாஸிர் தஃலீம் ஆக இருந்தவர் கூறுகிறார்: ஏதாவது மாணவர் உடைய உதவித் தொகை காலத்தின் கலீஃபாவின் தரப்பிலிருந்து சில காரணங்களுக்காக அனுமதி மறுக்கப்பட்டு விட்டால் காலத்தின் கலீஃபாவிடமிருந்து அனுமதிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றி அவர்களிடம் கூறுங்கள். கோபம் அல்லது மறுப்பு பற்றிய விஷயங்களை நமது தரப்பிலிருந்து தெரிவிக்க வேண்டும் என்பார்.

ஸஃபர் அஹ்மது ஸஃபர் முரப்பி சாஹிப் கூறுகிறார்: அவரும் கூட இவர்களின் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது சம்பந்தமாக எழுதியுள்ளார். காலில் வீங்கி இருந்தும் கூட அதனை பொருட்படுத்தவில்லை என்று எழுதியுள்ளார்.

சலீம் சாஹிப் எழுதியுள்ளார்: இவர் மூன்றாவது கலீஃபாவின் தனிச்செயலராக இருந்தவர். அதிகமாக கடிதங்கள் சேர்ந்தால் எல்லாரிடமும் கடிதங்களை பிரித்துக் கொடுத்து பணியை முடிப்பார்கள். தனக்காகவும் கிளர்க்குகளுக்கு சமமாக எடுத்துக் கொள்வார்கள். கிளர்க்கை விட அதிகமாக நாம் தனிச்செயல் என்ற முறையில் எடுத்துக் கொள்வோம் என்பார்கள். பிறகு அவற்றிற்கு பதில் எழுதி எம்மை விட விரைவாக முடித்து விடுவார்கள். கடிதம் எழுதுவது மட்டுமின்றி டிராஃப்ட் செய்வதிலும் நல்ல திறமை இருந்தது. இவர்களது எழுத்தும் உறுதியானதாக இருக்கும்.

வகாலத்தே மால் ஸானியின் ஓர் ஊழியர் எழுதுகிறார்: நாங்கள் தஹ்ரீகே ஜதீதின் வரலாற்றை எழுதிக் கொண்டிருந்தோம். பொருள் தியாகம் பற்றி அறிமுகம் எழுதிக் கொண்டிருந்தோம். அதில் பல தவறுகளை சரி செய்து இறுதி வரைவு தயார் செய்து வகீலுல் மால் இடம் காட்டும்போது, மியான் சாஹிபிடம் காட்டுங்கள் என்று அவர் கூறினார். நான் சரி அதனை மியான் சாஹிபிடம் கொடுக்கிறேன். அது 150 முதல் 200 பக்கங்கள் வரை இருந்தது. ஏறக்குறைய 4, 5 நாட்கள் நிம்மதியாக இருக்கலாம் என எண்ணினேன். ஆனால் நான் காலையில் அலுவலகம் வந்தபோது ஒரு கவர் இருந்தது. இரவோடு இரவாக அதனை படித்து முடித்திருந்தார்கள். இதுவே அன்னாரின் பணிகளின் செயல்திறன் ஆகும். இது ஒவ்வொரு பணியாளருக்கும் முன்மாதிரியாக உள்ளது. சத்ர் மஜ்லிஸ் கார்பர்தாஸ் ஆக இருந்தார்கள். மிகவும் ஆழமாக ஆய்வு செய்தார்கள்.

பிறகு இஸ்லாஹ்–வ–இர்ஷாதின் உள்ளூர் நாஸிர் சமீவுல்லாஹ் ஸாஹித் சாஹிப் எழுதுகிறார்: ஒருமுறை எத்தனை முரப்பிமார்களின் குடும்பங்கள் இருக்கிறதோ அந்த பட்டியலை எடுங்கள் என்று கூறினார்கள். நான் அந்த பட்டியலை கொடுத்தவுடன் மனைவியுடன் எல்லா வீடுகளுக்கும் சென்று, உங்கள் கணவர் ஜமாஅத் பணியில் இருக்கிறார். இதனால் உங்களுக்கு ஏதாவது கஷ்டம் என்றால் எனக்கு தெரிவியுங்கள். அவர்களுக்கு எந்தப் பிரச்சனையும் கொடுக்க வேண்டாம் என்றார்கள்.

இங்குள்ள வகாலத் தஃமீலோ தன்ஃபீஸின் பணியாளர் கலீல் ரஹ்மான் சாஹிப் கூறுகிறார்: சவுத்ரி முஹம்மது அலி சாஹிபுடைய நூலை நான் கம்போஸிங் செய்தேன். இறுதி திருத்தம் செய்வதற்காக அதனை சவுத்ரி சாஹிபிடம் அனுப்பினார்கள். அதை அன்னாரிடம் கொடுத்த பிறகு நான் சிறிது நேரம் அங்கு நின்றேன். அவர்கள் என்னிடம் ஏதாவது பிரச்சனையா என்று

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

கேட்டார்கள். நான் பயந்தவாறு எனது தாயாருக்கு அறுவை சிகிச்சை என்றேன். நான் இவ்வளவுதான் கூறினேன். அன்னார் எவ்வளவு பணம் தேவை? என்றார்கள். தனது மேஜையின் டிராயரிலிருந்து கருவூலத்தின் செக்புக்கை எடுத்தார்கள். நான் இப்போது 7000 ரூபாய் தேவைப்படுகிறது. பில் வரும்போது அதனை கழித்து விடுங்கள் என்றேன். அன்னார் தனது சொந்தக் கணக்கிலிருந்து கொடுத்தார்கள். துஆ செய்கிறேன். அதனை நான் கழித்து விடுவேனா இல்லையா என்ற கவலை உனக்கு வேண்டாம். இன்னும் தேவை இருந்தாலும் என்னிடம் வரலாம். பயப்பட வேண்டாம் என்றார்கள்.

இதேபோன்று ஹாஃபிஸ் சாஹிப் எழுதுகின்றார்கள்: கிலாஃபத்துடன் சிறப்பான தொடர்பு இருந்தது. அது எல்லா சந்தர்ப்பத்திலும் வெளிப்பட்டு வந்தது. நாஸிர் அஃலா ஆக்கப்பட்டதும் அஞ்சுமன் கூட்டத்தில் முதன் முதலாக பேசியபோது நாஸிர்மார்களிடம் கூறினார்கள்: எனக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கூற வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் கண்டிப்பாக செய்வீர்கள். ஏனெனில் கலீஃபத்துல் மஸீஹ் என்னை நியமித்துள்ளார்கள். ஆனால் எனக்கு உங்களுடைய துஆ மிகவும் தேவையாகும். ஏனெனில் சிலரின் பாதங்களில் இடம் பெறுவது மிகவும் கடினமானதாகும் என்றார்கள்.

அதுபோன்று நஸாரத்தே தீவானிலிருந்து நாஸிர் அஃலா ஆக்கப்பட்டதும் அங்குள்ள ஊழியர் எழுதுகிறார்: அலுவலகம் செல்லும் முன் எங்களைச் சந்திக்க வந்தார்கள். உங்களிடம் விடைபெற வந்துள்ளேன். இதனைக் கேட்டு என் உள்ளம் கஷ்டப்பட்டது. நான், மியான் சாஹிப் நீங்கள் இங்கேயே இருங்கள் அல்லது எங்களையும் அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினேன். அப்போது அவர்கள், உங்களை நான் எப்படி கூட்டிக் செல்ல முடியும். நான் கலீஃபத்துல் மஸீஹின் கட்டளையின்படி செல்கிறேன் என்றார்கள்.

பிறகு சில நாட்களிலேயே தமது ரப்பின் கட்டளைக்கேற்ப சென்று விட்டார்கள். அல்லாஹ் இவர்களின் தகுதியை உயர்த்துவானாக. அவர்கள் எங்கு சென்றார்களோ அங்கு நாம் ஒவ்வொருவரும் நமது வேளை வரும்போது செல்லவே வேண்டியதுள்ளது. அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப வாழ்வை கழித்தவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். அல்லாஹ் இவர்களின் தகுதியை உயர்த்துவானாக. இவர்களின் பிள்ளைகளுக்கும் இவர்களின் நன்மையில் நிலை நிற்பதற்கும் அதை செய்வதற்கும் வாய்ப்பு வழங்குவானாக. ஒவ்வொரு பொறுப்பாளரும் வாழ்வை அர்ப்பணித்தவர்களும் அவர்கள் எவ்வாறு தனது வக்ஃபை நிறைவேற்றினார்களோ தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளைச் செய்தார்களோ அதுபோன்று அல்லாஹ் மற்றவர்களுக்கும் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. அல்லாஹ் ஜமாஅத்திற்கு வருங்காலத்திலும் அர்ப்பணிப்பு மற்றும் பற்றுடன் பணி செய்யும் ஊழியர்களை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸாவாக நாம் தொழ இருப்பது முகர்ரமா Dipano Farkhoot சாஹிபா உடையதாகும். 26 ஜனவரி 2018 அன்று தமது 47 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். உயர் இரத்த அழுத்தம் மற்றும் தொற்று காரணமாக மணரம் நிகழ்ந்தது. அறுவை சிகிச்சை நடந்தது. இருந்தும் ஒரு வாரத்தில் வஃபாத் ஏற்பட்டு விட்டது. இவர் நீண்ட காலமாக நோயுற்றிருந்தார். 15 வயதில் இவரது இரண்டு சிறுநீரகங்களும் பணி செய்வதை விட்டு விட்டன. இருந்தும் இவர் அஹ்மதி ஆனதிலிருந்து தொழுகையை நேரத்தில் நிறைவேற்றினார். தஹஜ்ஜுத் தொழுது வந்தார். திருக்குர்ஆனும் ஓதி வந்தார். ஆனால் இவரோ கிறித்தவத்திலிருந்து வந்தவர். 2004 –ல் இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அதிலிருந்து தொடர்ந்து தொழுகையில் தஹஜ்ஜுத் பேணுதலுடன் இருந்து வருகிறார். முஸ்லிம்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறதே என்ற எண்ணம் இருந்தது. இவர் அஹ்மதிய்யத்திற்கு முன்பே இஸ்லாத்தை ஏற்றிருந்தார். பிறகு அஹ்மதி முஸ்லிம் ஆனார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மறுமை பற்றிய முன்னறிவிப்பின் அடிப்படையில் உண்மையை ஆய்வு செய்தார். இதன் விளைவாக அஹ்மதிய்யத்தில் இணைந்தார்.

அவர்கள் கூறுகிறார்கள்: இவர் சிறிது சிறிதாக மரணத்தை நெருங்குவதாக உணர்ந்தார். இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமே மரணத்தை முற்றிலும் நெருங்கிய நிலையில்தான். இவர் அல்லாஹ்வை சந்தித்து அதனால் புதிய மூச்சைப் பெற்றுள்ளார்கள் என்று முஸ்லிம் அல்லாத டாக்டர் கூறினார். இஸ்லாம் அஹ்மதிய்யத்தை ஏற்கும் முன்பு இவருக்கு ஹெபிடட்டிஸ் சிபி ஆகியிருந்தது. பைஅத் செய்த பிறகு அல்லாஹ் இவருக்கு அற்புதமான நிவாரணத்தை வழங்கினான். இவர் தனது அற்புதமான நிவாரணம் குறித்து தனது குடும்பத்தாரிடம் எப்போதும் கூறி வந்தார். என்னை இருமுறை சந்தித்துள்ளார். மிகவும் கலப்பற்ற தன்மையையும் பற்றையும் வெளிப்படுத்தி –யுள்ளார்கள்.

அமீர் சாஹிப் கூறுகிறார்கள்: சில நாட்களுக்கு முன் நான் சந்திக்கச் சென்றபோது அவர் உணவு தயார் செய்தார். நான் சிரமம் ஏன் என்று கூறினேன். அன்னார், முதன் முறை வந்துள்ளீர்கள். அதுவும் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதியாக வந்துள்ளீர்கள் என்றார். வீட்டில் எப்போதும் M.T.A ஓடிக் கொண்டிருக்கும்.

அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. மன்னிப்பை வழங்குவானாக. இவரது குடும்பம் அஹ்மதிய்யத்தை ஏற்க வேண்டும் என்ற இவரது விருப்பத்தை அல்லாஹ் நிறைவேற்றுவானாக.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி....)

கூட அவர் இஸ்லாத்தின் ஒளியிலிருந்து எந்த பலனையும் பெறவில்லை என்பது வருத்தத்திற்கு உரியதாகும். இன்றைய நாட்களில் அவர் ஆரியராக இருக்கின்றார். அவருக்கு நேர்வழி கிடைப்பது ஒருபுறமிருக்கட்டும். இந்த மக்களால் உண்மையான சாட்சியைக் கூற முடியும் என்ற அளவில் கூட அவர்கள் மீது எனக்கு நம்பிக்கையில்லை. வெளிப்படையில் உண்மைக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று வீண் வார்த்தைகளைக் கூறுகின்றனரே தவிர அதற்கேற்ற செயல் அவர்களிடம் இல்லை. எனினும், அத்தகைய சாட்சியிடம் அதாவது ஷரம்பத்திடம் சத்தியம் செய்து கூறுமாறு கூறினால், பொய்யாக சத்தியம் செய்யும் பட்சத்தில் சந்ததிகள் மீது அதன் தாக்கம் ஏற்பட வேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவரிடம் கூறினால் பிறகு அவர் கண்டிப்பாக உண்மையை கூறுவார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். எனது பல முன்னறிவிப்புகளுக்கான சாட்சியங்கள் அவரிடம் இருக்கின்றன. அவரை நாம் பின்தொடர்ந்து செல்வதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காக எனக்கு அவை நினைவில் இல்லை என்று அவர் கூறலாம். ஆனால், சத்தியம் செய்து கூற வைப்பது எத்தகையதொரு விஷயம் என்றால், கண்டிப்பாக அதன் மூலமாக அவை அவருக்கு நினைவில் வந்து விடும். அவர் பொய் கூறினால் பிறகு உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். எனது இறைவன் அவருக்கு தண்டனை வழங்குவான். மேலும் இந்தவொரு அடையாளமும் கூட வெளிப்படும். அவர் மிகவும் தெளிவான ஒன்பது அடையாளங்களின் சாட்சியாக இருக்கின்றார். எனது அடையாளங் -களுக்கு முஸ்லிம்கள் மட்டும் சாட்சியாக இருக்கவில்லை. மாறாக, உலகில் எந்த அளவு சமுதாயங்கள் உள்ளனவோ அவர்கள் அனைவரும் எனது அடையாளங்களுக்கு சாட்சிகளாக இருக்கின்றனர் என்பதற்காக வல்லமையுள்ள இறைவனுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். فالحمد لله على ذالك

**117 -வது அடையாளம்:** ஒருமுறை மலாவாமல் என்ற பெயரை உடைய ஓர் ஆரியர் எலும்புருக்கி நோயின் பாதிப்பிற்கு ஆளானார். மேலும் அவநம்பிக்கையின் அடையாளங்கள் அவரிடம் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தன. அவர் கனவில் ஒரு விஷப்பாம்பு அவரைக் கடித்து

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**0422-2399980, 4351980**
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

**276, N.H. Road, Coimbatore - 641 001.**

**123 -வது காதியான் ஆண்டு மாநாடு 2017 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இப்போது 126 -வது வருடமாகும்)**

# அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 123 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்.**

✦ 44 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர் ✦ 20,048 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர் ✦ ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் 5,300 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் ✦ தஹஜ்ஜுது தொழுகை ✦ திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச்சூழல் ✦ கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள் ✦ மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு ✦ கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள் ✦ நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு ✦ ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது ✦ பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது ✦ 32 திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது ✦ அச்சகம் மற்றும் மின்னனு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ் ✦ அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது ✦ 20 முதல் 22 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான إِسْمَعُوْا صَوْتَ السَّمَآءِ جَآءَ الْمَسِيْحُ جَآءَ الْمَسِيْحُ MTA இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டூடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது ✦ 3 முதல் 5 ஜனவரி வரை *“The Messiah of the Age”* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி *MTA* -வில் ஒளிபரப்பப்பட்டது

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்: இந்த மனித திட்டங்கள் இறைவனின் திட்டங்களுக்கு முன்னால் நிற்க முடியாது. அஹ்மதிய்யத்திற்கு முன்னேற்றத்தை வழங்குவது இறைவனின் விதியாகும். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக இவ்வாறு கூறியிருந்தான்: “நான் உமக்கு கண்ணியத்தை வழங்குவேன். அதை மேலும் வளர்ச்சியடையச் செய்வேன்”. இந்த இல்ஹாம் நிறைவேறி வருவதை ஒவ்வொரு நாளும் நாம் பார்த்து வருகின்றோம். அஹ்மதிய்யத்தின் எதிரிகள் வலுவாக நம்மை எதிர்த்தபோதிலும் அஹ்மதிகள் தொடர்பாக அவர்கள் இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கைகளை ஏற்றுக் கொள்வதில்லை என்று பொய்ப்பிரச்சாரம் செய்த பிறகும் ஆயிரக்-கணக்கான மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்து வருகின்றனர். முஸ்லிம்களும் இணைந்து விடுகின்றனர். சில மக்கள் பற்றி நமக்கு எதுவுமே தெரியாமல் இருந்தபோது அவர்களே நம்மை தொடர்பு கொண்டு வருகின்றனர். மிகவும் முயற்சி செய்து நம்மை அவர்கள் தொடர்பு கொண்டுள்ளனர். இக்காலத்தின் முன்னேற்றமானது தப்லீகிற்காக தேவைப்படும் வசதிகளை தாமே உருவாக்கி இருக்கின்றது. எதிரிகளின் சொற்பொழிவுகளும் அவர்கள் கூறுகின்ற தவறான விஷயங்களும் சமூக ஊடகங்களில் வருகின்றன. அவர்கள் பேசுகின்ற வீணான விஷயங்களைப் பார்த்து நல்லியல்பு கொண்டுள்ள பலரும் நம் பக்கம் வந்து கொண்டிருக்கின்றனர். இது இறைவனின் பணி ஆகும். மனிதனால் இதனை தடுத்து நிறுத்தி விட முடியாது. இன்று உலகம் முழுவதும் பார்க்கப்படும் இந்த மாநாடு கூட இறைவனின் உதவி நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்பதற்கான ஆதாரமாகும். அது அல்லாமல் நமது வசதிகளை பார்க்கும்போது இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை உலகின் ஒவ்வொரு மூலை வரை எட்ட வைப்பது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். எனக்கு திருக்குர்ஆனின் கட்டளையின் மீது முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. அதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று கூறியிருக்கின்றது. மேலும், اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ இன்று நாம் உங்களுக்காக உங்களது மார்க்கத்தை முழுமைப்படுத்தி விட்டோம் என்று அது கூறுகின்றது. இப்போது இஸ்லாம்தான் விருப்பத்திற்குரிய மார்க்கமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்செயல்களின் வழியை விட்டு விட்டு வேறு ஒரு வழியை கடைபிடிப்பது என்பது பித்அத் ஆகும். அதாவது மார்க்கத்தில் புதிதாக ஒன்றை புகுத்துவதாகும். பொதுவாக அஹ்மதி அல்லாத முஸ்லிம்கள் பித்அத்தின் வழிகளைப் பின்பற்றிச் செல்கின்றனர். தொழுகைகளில் அவர்களுக்கு இன்பம் கிடைப்பதில்லை. தாங்களே உருவாக்கிக் கொண்ட சில திக்ருகளில் அவர்கள் நிலைத்து நிற்கின்றனர். தலைப்பாகைகளைக் கழற்றி எறிந்து விட்டு தலையில் கைக்குட்டையைப் போட்டுக் கொள்கின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இத்தகைய செயல்கள் இருந்ததா? இவ்விஷயங்கள் இன்றும் கூட சபைகளில் இதுபோன்றே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் நிரந்தரமான நபித்துவம் எனக்கு கிடைத்திருப்பதாக வாதம் செய்துள்ளது போன்று இவர் நபி என்று வாதம் செய்துள்ளார் என்று என் மீது குற்றம் சாட்டப்படு-கின்றது. ஆனால், நானோ பெருமானார் (ஸல்) அவர்களின் ஓர் அடியானாக இருந்து அன்னாரின் ஷரீஅத்திற்கு ஏற்ப நானும் செயல்பட்டு பிறரையும் செயல்பட வைக்கக் கூடியவனாக இருக்கின்றேன் என்பதே எனது வாதமாகும். பொய்யான நபித்துவத்தை சுயமே நீங்கள்தான் உருவாக்கி-யுள்ளீர்கள் என்பதை நீங்கள் பார்ப்பதேயில்லை. குர்ஆனுக்கும் தூதர் (ஸல்) அவர்களின் கூற்றுக்கும் மாற்றமாக புதிய புதிய திக்ருகளை நீங்கள்தான் கண்டுபிடித்திருக்கின்றீர்கள். எனவே, போதனைகளில் சிலவற்றை நாங்கள் குறைத்திருக்கின்றோமா அல்லது நீங்கள் குறைத்துள்ளீர்களா? என்பதை நீங்களே நீதியுடன் கூறுங்கள். பீர்மார்கள் மற்றும் ∴பகீர்மார்களின் கபர்களில் ஸஜதா செய்கின்றீர்கள். எனவே நீங்கள் என் மீது குற்றச்சாட்டைச் சுமத்துவதற்கு முன்னதாக உங்களது நிலைமைகளைப் பாருங்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான அந்தஸ்து மற்றும் உயர் தகுதி தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று உறுதியாக நம்பாத வரை எவரும் உண்மையான முஸ்லிமாக ஆக முடியாது. எதுவரை அவர் புதிதாக மார்க்கத்தில் புகுத்தப்படுகின்ற விஷயங்களிலிருந்து விலகி நிற்க மாட்டாரோ மேலும் தனது சொல்லாலும் செயலாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீனாக ஏற்றுக் கொள்ளமல் இருப்பாரோ அதுவரை எதுவுமே அவரிடம் இல்லை. பொய்யான நபித்துவங்கள் அனைத்தையும் துண்டு துண்டாக்குவதே நமது பணியாகும். எல்லா ∴பீர்களையும் பாருங்கள். பிறகு செயலளவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் மீது நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் நாங்களா? அல்லது அவர்களா? என்பதைப் பாருங்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நாவால் காத்தமுன்னபிய்யீன் அவர்களை ஏற்றுக் கொண்டு விட்டு தமது செயலில் அதை பிரதிபலிக்காமல் இருப்பது மிகவும் அநீதியான தீங்கு விளைவிக்கக் கூடிய விஷயமாகும். உதாரணமாக, பக்தாதி தொழுகை, ம∴கூஸ் தொழுகை போன்ற பித்அத்துகளை நீங்கள் கண்டுபித்துள்ளீர்கள். அல்லது ஷேக் அப்துல் காதிர் ஜீலானி ஷேஹன் லில்லாஹ் என்று நீங்கள் கூறுவதற்கு ஏதாவது ஆதாரம் உங்களுக்கு கிடைத்திருக்கின்றதா? பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் அப்துல் காதில் ஜிலானி அவர்கள் இருக்கவேயில்லை. வெட்கப்படுங்கள்; இஸ்லாத்தின் ஷரீஅத்தைப் பேணுவது மற்றும் அதன் கட்டளைகளை தொடர்ந்து கடைபிடிப்பது என்பது இதுதானா? இந்த விஷயங்களை ஏற்றுக் கொண்டு இத்தகைய செயல்களைச் செய்ததன் மூலம் நான் கதமுன் நுபுவ்வத்தின் முத்திரையை உடைத்து விட்டேன் என்று என் மீது குற்றம்சாட்டுவதற்கான தகுதி உங்களுக்கு இருக்கின்றதா? என்பதை சுயமே நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். நீங்கள் உங்களது பள்ளிவாயில்களில் பித்அத்துகளுக்கு இடமளிக்காமல் இருந்திருந்தால் மேலும் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களின் உண்மை நபித்துவத்தின் மீது நம்பிக்கை

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (16:129)**

**ஜோதி அஸ்டின்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். [22:40]**

**லஜ்னா இமாயில்லாஹ்**

ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**

பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**

சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 15 March 2018 Issue No. 11

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி…)*

கொண்டு அன்னாரது நடைமுறையைப் பின்பற்றி நடந்து பெருமானார் (ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளை உங்களுக்கு வழிகாட்டியாக ஆக்கியவாறு செயல்பட்டிருந்தால் பிறகு எனது வருகைக்கான என்ன தேவை இருந்தது? உங்களது இந்த பித்அத்துகளும் புதிய நபித்துவங்களும் இறைவனது தன்மான உணர்வைத் தூண்டியது. அதாவது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது போர்வையில் ஒரு நபரை அனுப்பி வைத்து இந்த பொய்யான நுபுவ்வத்துகளின் சிலையை உடைத்து அழித்து விட வேண்டும் என்று இறைவனின் தன்மான உணர்வு விரும்பியது. எனவே, இந்த பணியை செய்வதற்காகவே இறைவன் என்னை நியமித்து அனுப்பி வைத்திருக்கின்றான்.

பிறகு அன்னார் தமது வருகை மற்றும் ஜமாஅத்தை நிறுவியதன் நோக்கம் பற்றி விளக்கிக் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவத்தை உயிர் பெறச் செய்வதற்காகவே நமது ஜமாஅத் நிறுவப்பட்டிருக்கின்றது. மக்கள் தூய மதீனாவிற்குச் செல்வதில்லை. ஆனால், அஜ்மீருக்கும் ஏனைய பெரியவர்களின் கல்லறைகளுக்கும் தலையில் எதுவும் அணியாமலும் வெறும் கால்களுடனும் செல்கின்றனர் அல்லது பாக்பதனின் ஜன்னலைக் கடந்து சென்று விடுவதே ஈடேற்றம் பெறுவதற்குப் போதுமானதாகும் என்று அவர்கள் கருதுகின்றனர். ஒருவர் ஒரு கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு நிற்கின்றார். வேறொருவர் இன்னொரு வழிமுறையைக் கடைபிடிக்கின்றார். இம்மக்களின் உரூஸ்களையும் திருவிழாக்களையும் பார்த்து ஓர் உண்மையான முஸ்லிமின் உள்ளம் இவர்கள் எதை உருவாக்கி வைத்துள்ளார்கள் என்பதைப் பார்த்து நடுங்குகிறது. அல்லாஹ்வுக்கு தன்மான உணர்வு இல்லாமல் இருந்திருந்தால், மேலும் إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ நாமே இந்த திக்ரை இறக்கினோம். நாமே இதை பாதுகாப்போம் என்ற இறைவனின் வார்த்தைகள் இல்லாமல் இருந்திருந்தால் சந்தேகமில்லாமல் இன்று இஸ்லாத்திற்கு ஏற்பட்டிருக்கும் அவல நிலையைப் பார்க்கும்போது அது அழிந்து விடும் என்பதில் எந்த சந்தேகமும் ஏற்பட முடியாது. ஆனால், அதன் பாதுகாப்பு தொடர்பான வாக்குறுதியானது பெருமானார் (ஸல்) அவர்களது நிழலாக தோன்றுகின்ற ஒருவர் அனுப்பட வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது. எனவே, இந்த காலத்தின் இறைவன் நபித்துவத்தை உயிர்பெறச் செய்து என்னை அதற்காகவே நியமித்து அனுப்பியுள்ளான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நேசத்திற்குரியவரின் மார்க்கத்தை அதன் அசல் நிலைமையில் உலகில் நிலைநாட்டுவதற்கும் அதனை பரப்புவதற்காகவும் தான் அனுப்பட்டுள்ளார்கள். உலக அரசாங்கங்களின் அடக்குமுறைகளும் வீணான விஷயங்களைப் பேசுவதும் இந்த மார்க்கத்தின் மறுமலர்ச்சியையும் அது வளர்த்து கனிகளைத் தருவதையும் தடுத்து நிறுத்தி விட முடியாது. நாம்தான் இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரின் பொதனைக்கு ஏற்ப அவர்களின் பிரச்சாரத்தைத் தொடர்நது செய்து வந்து 210 நாடுகளில் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களின் கொடியை உயரே பறக்க விடுபவர்களாக இருக்கின்றோம்.

மேலும் ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இன்று எதிரிகள் கூறுகின்ற விஷயங்களின் காரணமாக ஒவ்வோர் அஹ்மதிய்யின் மீதும் முன்னரை விட அதிகமாக இந்த பொறுப்பு இருந்து வருகின்றது. அதாவது அவர்கள் தமது நம்பிக்கையிலும் செயல் அளவிலான நிலைமையிலும் எத்தகைய ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்றால் அது அவரை இறைவனுக்கு மிக அருகில் கொண்டு செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்றே அரியணையில் இருக்கின்ற இறைவனுடன் நமக்கு உறுதியான தொடர்பு இருந்தால் பூமியிலுள்ள எதிர்ப்புகள் நம்மிடம் எந்த சீர்குலைவையும் ஏற்படுத்தி விட முடியாது. எதிர்ப்புகள் காற்றில் பறந்து விடுகின்ற அந்த நாட்கள் உறுதியாக வரவிருக்கின்றன. அப்போது எதிரிகள் தலைகுப்புற விழ வைக்கப்படுவர். இறைவனின் வாக்குறுதிகள் நிறைவேறும். அதற்காக நாம் நம்மிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

தமது எழுச்சிமிக்க சொற்பொழிவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் நமக்கு இந்த எல்லா விஷயங்களுக்கும் ஏற்ப செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஒவ்வொரு நாளும் நாம் எடுத்து வைக்கின்ற அடி நன்மைகளில் முன்னேறிச் செல்லுகின்ற அடியாக இருக்கட்டும. அல்லாஹ் எல்லா அஹ்மதிகளையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. மேலும் எதிரிகளின் ஒவ்வொரு சூழ்ச்சிகளையும் முறியடித்து அவர்கள் தோல்வியைத் தழுவும் படி செய்வானாக. மாநாட்டிற்கு பிறகு அதில் கலந்து கொண்ட ஒவ்வொருவரையும் அல்லாஹ் நலமுடன் அவர்களது வீடுகளுக்கு கொண்டு செல்வானாக. அவர்கள் இந்த மாநாட்டின் அருள்களை தமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆக்குபவர்களாக இருப்பார்களாக ஆமீன்.

ஆண்டு மாநட்டின் வந்திருப்பவர்களின் எண்ணிக்கை தொடர்பாக ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: 44 நாடுகளின் பிரதிநிதிகளாக இந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 20,048 ஆகும். அல்லாஹ் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரது பாதுகாவலனாகவும் அவர்களுக்கு உதவி செய்பவனாகவும் இருப்பானாக. இங்கு இலண்டனில் இந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்களது எண்ணிக்கை 5,300 ஆகும். இறுதியில் ஹுஸூர் அவர்கள் மிகவும் உருக்கமான நிறைவு துஆவை செய்து வைத்தார்கள். அத்துடன் மூன்று நாட்கள் நடைபெற்ற அருள்கள் நிறைந்த இந்த மாநாடு அதன் நிறைவை எட்டியது.

*(தொடரும்…)*

---

*(9-வது பக்கத்தின் தொடர்ச்சி….)*

*விட்டதைக் கண்டார். அவர் ஒருநாள் தனது வாழ்நாள் பற்றி நம்பிக்கையிழந்த நிலையில் என்னிடம் வந்து அழுதார். நான் அவருக்காக துஆ செய்த போது* قلنا يا نار كوني بردا وسلاما *அதாவது, நாம் காய்ச்சலின் நெருப்பிடம் நீ குளிர்ந்து சாந்தி நிறைந்ததாகி விடு என்றோம் என்ற பதில் வந்தது. இதற்குப் பிறகு ஒரு வாரத்திற்குள் அவர் நலம் அடைந்து விட்டார். இப்போது வரை அவர் உயிருடன் இருக்கின்றார். பராஹீனே அஹ்மதிய்யாவின் 227 -வது பக்கத்தைப் பாருங்கள். ஆனால் அவரிடம் சாட்சி கூற வைப்பதற்கு சத்தியம் செய்து கூறுமாறு கூற வேண்டிய தேவை இருக்கும் என்பது உறுதியாகும்.*

**118 -வது அடையாளம்:** *ஒருமுறை (ஜிஹ்லமை சார்ந்த சரம்தீன் என் மீது தொடுத்திருந்த) ஒரு இராணுவ வழக்கின் காரணமாக நான் குர்தாஸ்பூரில் இருந்தபோது* يسئلونك عن شانك- قل الله ثم ذرهم في خوضهم يلعبون *உமது மகத்துவம் என்ன ? மேலும் உமது தகுதி என்ன ? என்று உமது மகிமை தொடர்பாக அவர்கள் கேட்பார்கள். அந்த இறைவனே எனக்கு இந்த தகுதியை வழங்கியுள்ளான் என்று கூறுவீராக. பிறகு அவர்களை தமது கேளிக்கையிலும் விளையாட்டிலும் விட்டு விடுவீராக என்று எனக்கு இல்ஹாம் வந்தது. அப்போது குறையாமல் நாற்பது பேர்களைக் கொண்ட குர்தாஸ்பூரில் என்னுடன் இருந்த அந்த ஜமாஅத்திற்கு எனது இந்த இல்ஹாம் பற்றி கூறினேன். அவர்களில் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் எம்.ஏ. மற்றும் வழக்கறிஞரான காஜா கமாலுத்தீன் சாஹிப் பி.ஏ. ஆகியோரும் இருந்தனர். இதற்குப் பிறகு நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதும் எதிர் தரப்பினரின் வழக்கறிஞர் உங்களது மகத்துவமும் உங்களது உயர் தகுதியும் திர்யாகுல் குலூப் என்ற நூலில் நீங்கள் எழுதி இருப்பது போன்றதுதானா ? என்ற இதே கேள்வியை என்னிடம் கேட்டார். இறைவனின் அருளால் இதுவே எனது உயர் தகுதியாகும். அவனே இந்த தகுதியை எனக்கு வழங்கியுள்ளான் என்று நான் பதில் கூறினேன். அவ்வாறு இறைவனிடம் இருந்து சுபுஹ் நேரத்தில் வந்திருந்த இல்ஹாம் ஏறக்குறைய அஸ்ர் நேரத்தில் நிறைவேறியது. மேலும் நமது முழு ஜமாஅத்தின் ஈமான் அதிகரிப்பதற்கும் அது காரணமாக இருந்தது.*

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 275)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad